Regd. No. 2975

ஸ்ரீ ராமாநுஜன் 319, 320

ஆசிரியர்: P. B. அண்ணங்கராசாரியர்.

SRI RAMANUJAN

Editor:

Mahamahimopadhyaya

P. B: ANNANGARACHARYA, KANCHIPURAM-631503.

வருஷச் சந்தா ரூ. 10. ஆஜீவியச் சந்தா ரூ. 10.

Released by Maran's Dog ,Toronto, Canada

பேருளாளன் பெருந்தேவி நாயகர்
திருவடிகளே சரணம்.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர்
திருவடிகளே சரணம்.

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி*
தாழ்வாது மில்குரவர் தாம்வாழி—ஏழ்பாரு
முய்ய வவர்க ளுரைத்தவைகள் தாம்வாழி*
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

1975ஸு தை, மாசி

http://acharya.org

அன்பர்களுக்கு அறிவிப்பு

நமது பத்ராதிபர் ஸ்வாமி இரண்டு மாதகாலமாகத் திருமேனி பாங்கில்லாம லிருப்பதால் பத்திரிகை வெளிவரத் தாமதமானதுடன் தவிர தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கிற "திவ்யப்ரபந்த மஹாநிதி" முதலிய விஷயங்களும் நின்றிருக்கின்றன. அடுத்த மாதம்முதல் எல்லாம் ஒழுங்காய் வெளிவருமென்று நம்பியிருக்கின்றோம். 'ஸ்ரீபாஷ்ய ஸாராம்ருதம்' என்னும் க்ரந்தமொன்றையும் ஸ்ரீஸ்வாமி இப்போது பதிப்பித்துள்ளார். வடமொழி அறியாதாரும் ஸ்ரீபாஷ்யத்தின் ஸாரத்தை உணர்ந்துய்யும் வண்ணம் இந்நூல் அமைந்துள்ளது. ரூ. இரண்டு M. O. செய்பவர்கட்குப் புத்தகம் அனுப்பப்படும். தி. அ. அனந்தாழ்வான்.

—x—

புது டில்லியில் திருமங்கையாழ்வார் ப்ரதிஷ்டைக்கு நன்கொடை

ஒரு வேண்டுகோள்

[ஸ்ரீமான் A. ராமாநுஜாசாரியர், B.A., 60, பெருமாள் கோயில் தெரு, ஸைதாப்பேட்டை, சென்னை-15]

'ஸ்ரீராமாநுஜன்' 317ல் தில்லி ஸ்ரீராம மந்திர் என்ற சக்ரவர்த்தி திருமகன் ஸன்னிதியில் ஸ்ரீ நம்மாழ்வார் திவ்யமங்கள விக்ரஹ ப்ரதிஷ்டை 25—10—74ல் நடந்தது பிரசுரிக்கப்பட்டது. அச்சமயம் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ ஸ்ரீமந் நாராயண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகளும் ஸ்ரீமான் உ. வே. காஞ்சீ ப்ர. ப. அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகளும் தங்கள் மங்களாசாஸன ஸ்ரீமுகங்களில் யோசனை கூறியபடி இப்போது ஸ்ரீ திருமங்கையாழ்வாரின் திவ்யமங்கள விக்ரஹ ப்ரதிஷ்டைக்கு ஸ்ரீமான் E. வைகுண்டமையங்காரை ஆர்கனைசராகக் கொண்ட ஒருகமிட்டி மூலம் ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. எடமணல் (சீர்காழி) வாசியான ஸ்ரீமான் ராமசந்திரநாயுடு, (அட்வகேட்) அவர்கள் ப்ரயத்னத்தின் பேரில் ஸ்ரீ விஜயராகவலு நாயுடு சாரிடியார் விக்ரஹ உபயம் செய்வதாக ஒப்புக்கொண்டு, கும்பகோணத்தில் பிரதிஷ்டை நடந்துகொண்டிருக்கிறது. மேலும் அவதாரஸ்தலமான குறையலூரிலும் திருநாங்கூர் திவ்யதேசங்களிலும் திவ்யமங்கள விக்ரஹத்திற்கு மரியாதைகள் செய்வித்து தில்லிநகருக்கு எழுந்தருளப்பண்ணி ஸம்ப்ரோக்ஷணம்செய்ய ரூ. 2,000-க்குக் குறையாமல் ஆகலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்புனித கைங்கர்யம் பாகவதோத்தமர்களின் தாராள பொருளுதவியால்தான் நிறைவேறவேண்டும். அவர்கள் நன்கொடைகளை ஸ்ரீ E. வைகுண்டமையங்கார், ஸ்ரீராமமந்திர், லோடி ரோட், ந்யூ டில்லி-3 என்ற முகவரிக்கு அனுப்பும்படி பிரார்த்திக்கப்படுகிறார்கள்.

http://acharya.org

ஸ்ரீ ராமாநுஜன்—319, 320

ஆசிரியர்:
மஹாமஹோபாத்யாய ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 27 | ஆனந்தஹே தை, மாசி 1—3—75 | ஸஞ்சிகை 7, 8

என்பால் அன்பார்ந்தவர்கட்கும் எனது அன்பர்கட்கும் தெரிவிப்பது

1964-ஆம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் திருவல்லிக்கேணி தேவஸ்தானத்தில் தொடர்ச்சியாக உபந்யாஸங்கள் நடந்துவந்தபோது 21-ஆம் தேதி ஹ்ருதயகோச வேதனை ஏற்பட்டு அப்போது பயங்கரமான நிலைமையிருந்தது அன்பர்களுக்கு நினைவிருக்கும். அப்போது பகவத் பாகவத ஆசார்யக்ருபையினால் ஒன்றிரண்டு மாதங்களில் ஸ்வாஸ்த்யம் ஏற்பட்டது. ஆனாலும் சனி ஞாயிறுதோறும் சென்னையில் நடந்துவந்தவுபந்யாஸம் அறவே நிறுத்தப்பட நேர்ந்தது. தவிர, என்னுடைய க்ருஹத்தில் இரண்டாவது மூன்றாவது மாடிகளில் நான் இருப்புவைத்துக்கொண்டிருந்தபடியால், படியேறுவது கூடவே கூடாது என்னும் டாக்டர்களின் கடுமையான உத்தரவின் பேரில் அன்று முதலாக க்ருஹத்தில் வாஸம் விடப்பட்டு எனது பாடசாலைக்கடுத்த ராமாநுஜ கூடத்தில் வாஸம் வைத்துக்கொள்ள நேர்ந்தது. இது பத்து வருஷமாகி விட்டது. நேற்று மார்கழி மாதத்தில் சென்னையில் நான் வசித்தபோது எனக்கு ஏற்பட்ட தேஹஅஸௌக்கியம் சென்ற 318 இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விளையாட்டுப்போல் 50 நாள் ஆகிவிட்டது. "தத்சாந்திரௌஷதைர் தானைர் ஜபஹோமஸுரார்ச்சனை:" என்கிறபடியே எதிலும் குறையில்லாமல் நடந்துவருகிறது.

தினமணி பத்திரிகையின் Sub-editor சிலநாட்களுக்குமுன் என்னைக்காண இவ்விடம் வந்திருந்தார். தேஹாரோக்யத்தைப்பற்றிக் கேட்டார். "சுமாராகிக் கொண்டிருக்கிறது" என்று பதில் சொன்னேன். அதை அவர் அப்படியே பத்திரிகையில் (10—2—75) வெளியிட்டுவிட்டார். அதனால் அன்பர்கள் ஸந்தோஷக் கடிதங்களை தினப்படி எழுதிவருகிறார்கள். ஸந்தோஷாதிசயத்தினால் அவரவர்கள் செய்து வருகிற மங்களாசாஸனம் பேரருளாளன் பெருந்தேவி மணாளன் க்ருபையினால் பலித்துவரவேணும். தேஹத்தில் வ்யாதியொன்றுமில்லை. திடீரென்று ஏற்பட்ட அசக்தி தவிர வேறு நினைப்பதற்கில்லை.

http://acharya.org

ஸ்ரீரஸ்து

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரர் ஸ்வாமியின்

ஆனந்த வருஷம் பங்குனி விசாக

மஹோத்ஸவத்தின் பிரகடனம்

ஸ்ரீமத் உபயவே. அண்ணங்கராசாரிய ஸ்வாமிகளின் எண்பத்து நான்காவது திருநக்ஷத்ர பூர்த்தி மஹோத்ஸவம் நிகழும் மாசி மீ விசாகம் முதற்கொண்டு பங்குனி விசாகம் அளவாக கீழ்க்கண்ட விளாப்படி திருமாளிகையில் நடைபெறும். **3—3—75** முதலாக **30—3—75** வரை அதாவது மாசி 19ம் தேதி திங்கட்கிழமை முதலாகப் பங்குனி மாதம் 16ம் தேதி விசாகம் (ஞாயிற்றுக்கிழமை) அளவாக கீழ்க்கண்டபடி நடைபெறும்:

1. திங்கள். திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி முதற்பத்து
2. செ. இரண்டாம்பத்து
3. பு. மூன்றாம்பத்து
4. வி. நான்காம்பத்து
5. வெ. பெரியாழ்வார் திருமொழி சாற்றுமுறையும் திருப்பாவையும்
6. ச. நாச்சியார் திருமொழி
7. ஞா. பெருமாள் திருமொழி
8. தி. திருச்சந்த விருத்தம்
9. செ. திருமாலை-முதலாயிரம்பூர்த்தி
10. பு. முதல் திருவந்தாதி
11. வி. இரண்டாம் திருவந்தாதி
12. வெ. மூன்றாம் திருவந்தாதி
13. ச. நான்முகன் திருவந்தாதி
14. ஞா. திருவிருத்தம்
15. தி. திருவாசிரியம் பெரிய திருவந்தாதி
16. செ. திருவெழுகூற்றிருக்கையும் சிறிய திருமடலும்
17. பு. பெரிய திருமடல்
18. வி. பெரியதிருமொழிதொடக்கம்

பங்குனி 7ம் தேதி (21—3—75) முதலாக காலை வேளைகளில் பெரிய திருமொழி ஸேவை. இரவு வேளைகளில் திருவாய்மொழி ஸேவையும் வித்வான்களின் உபந்யாஸங்களும் நடைபெறும். பங்குனி 16ம் தேதி காலை பெரிய திருமொழி சாற்றுமுறையும் அன்று மாலை திருவாய்மொழி சாற்றுமுறையும் நடைபெறும். மறுநாள் காலை இராமாநுச நூற்றந்தாதி உபதேச ரத்தினமாலை ஸேவை சாற்றுமுறை நடைபெறும். பிற்பகல் 3 மணிக்கு ஸம்பாவனையும் வித்வான்களின் உபந்யாஸமும் நடைபெறும். தினப்படியாக வேதபாராயணமும் நடைபெற்று வரும். பங்குனி மாதம் 7ம் தேதி முதல் வழக்கப்படி திருவீதி ப்ரதக்ஷிண பாராயணம் நடைபெறும்

இங்ஙனம்

29, தென்னண்டை மாடவீதி,
சின்ன காஞ்சீபுரம்.

செல்லமணி என்கிற **P. B. ரங்கநாதன்.**

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியருடைய

★ பகவத் பரத்வ ஸௌலப்யோபந்யாஸம். ★

திருவரங்கம் பெரிய கோயிலுக்கு ஸந்நிஹிதமான ஆமூர் அக்ரஹாரத்தில் ஸந்நிதி ஸம்ப்ரோக்ஷண மஹோத்ஸவ வித்வத் ஸதஸ்ஸில் (26-1-75) அன்பர்கள் அநுபவிக்க உபஹரிக்கப் பட்டது.

நம்மாழ்வார் திருவாய்மொழிக்கு (1-2-11ல் "சீர்த்தொடையாயிரம்" என்று ஒரு திருநாமம் சாற்றியுள்ளார். உலகில் பூமாலை தொடுப்பவர்கள் பலவகைப் புஷ்பங்களை வைத்துக்கொண்டு அவற்றையிட்டுத் தொடுக்குமாபோலே ஆழ்வார் தமது செந்தமிழ்ச் செஞ்சொல் மாலையை எம்பெருமானது பலவகைத் திருக்கல்யாண குணங்களையிட்டுத் தொடுத்தருளினர். அவை பரத்வ ஸௌலப்யங்கள்.

"நால்வர் கூடி நான்கு பிள்ளைகள் பெற்றனர்; நால்வர்கூடி ஒரு பிள்ளையைப் பெற்றனர்; அறுவர்கூடி ஆயிரமாயிரம் பிள்ளைகளைப் பெற்றனர்" என்றொரு விநோதவசனமுண்டு. (1) நால்வர்கூடி நான்கு பிள்ளைகள் பெற்றது ஸ்ரீராமாவதாரத்தில். (2) நால்வர்கூடி [வஸுதேவ தேவகீ நந்தகோப யசோதைகள் கூடி] ஒரு பிள்ளையைப் பெற்றது ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தில். இவ்விரண்டும் ப்ரஸித்தம். அறுவர்கூடி ஆயிரமாயிரம் பிள்ளைகள் பெற்றதைக் கூரத்தாழ்வா னருளிச்செய்கிறார். "ப்ரக்ருஷ்டம் விஜ்ஞாநம்" என்று தொடங்கி "ப்ரவர குணஷட்கம் ப்ரதமஜம் குணாநாம் நிஸ்ஸீம்நாம் கணநவிகுணாநாம் ப்ரஸவபூ:" என்று. ஜ்ஞானம் பலம் ஐச்வர்யம் வீர்யம் சக்தி தேஜஸ்ஸு என்கிற ஆறு குணங்கள் கூடி தயாக்ஷாந்தி ஒளதார்யாதிகளான அபரிமித கல்யாண குணங்களை ப்ரஸவித்தனவென்றபடி. இத் திருக்குணங்களெல்லாம் பரமபதநாதனிடத்திலு மிருக்கச்செய்தேயும் பரம ஸாம்யாபந்நர்களான நித்யமுக்தர்களுள்ள அவ்விடத்திலே பரத்வகுண மொன்றொழிய மற்ற குணங்கள் பிரகாசிக்க வழியில்லாமையாலே அத் திருக்குணங்களையெல்லாம் பிரகாசிப்பிக்கவேண்டியே பயணமெடுத்து வருகிறான் பரமன் இந் நிலவுலகுக்கு. இதனை பட்டர் "குணபரீவாஹாத்மநாம் ஜந்மநாம்" என்கிற ஸ்ரீஸூக்தியினால் விளங்கவைத்தார். "பூரோத்பீடே தடாகஸ்ய பரீவாஹ: ப்ரதிக்ரியா" என்றான் பவபூதி மஹாகவி. ஜலாசயங்களில் நீர் மிகமிக நிரம்பிவிட்டால் அதற்குப்போக்குவீடுவிட்டு ஜலாசயத்தைத்தரிக்கச்செய்வது வழக்கம். அங்ஙனே நீர் வெளிப்படுவதற்குப் பரீவாஹமென்று பெயர். அதுபோல, பரமபதநாதனுடைய திருக்குணங்கள் அங்கு விலைசெல்லமாட்டாமையாலே பரீவாஹாபேக்ஷை பிறந்து பரன் இந்நிலவுலகில் அவதரிக்கலாகிறது; அந்தத்திருக்குணங்களெல்லாம்

http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

இருட்டறையில் விளக்குப்போலே ப்ரகாசிப்பது இங்கேயாம். விபவாவதாரங்களையும் அர்ச்சாவதாரங்களையும் நோக்கி இங்கே என்கிறது முந்துறமுன்னம் விபவாவதாரங்களைக் கொள்வோம். மத்ஸ்யகூர்மாதிகளான விபவாவதாரங்களுள் ஸ்ரீராமாவதாரத்திலும் ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்திலுமே திருக்குணங்களைக் கொள்ளை கொள்ளையாக அநுபவிக்க ப்ராப்தமாகிறது. முராரி மஹாகவி அநர்க்கராகவ நாடகத்தில் கூறுகின்றார் —" [illegible] !! [யதி க்ஷுண்ணம் பூர்வைரிதி ஜஹதி ராமஸ்ய சரிதம் குணைரேதாவத்பிர் ஜகதி புநரந்யோ ஜயதி க:? ஸ்வமாத்மாநம் ..கதமுபகரிஷ்யந்தி கவய:?] இதன் கருத்தாவது-முற்காலத்தில் காவ்யநாடக சம்பூப்ரபந்தங்கள் இயற்றும் கவிகளெல்லாரும் ஸ்ரீராம சரித்திரத்தைப் பற்றியே எழுதிக்கொண்டிருந்தபடியால் நாம் அப்பெருமானை விட்டு வேறொரு பெருமானுடைய சரித்திரத்தைத் தொடுக்கலாமென்று பார்த்தால், இவ்வளவு திருக்கல்யாண குணங்களோடுகூடிய வேறொரு பகவத்வ்யக்தியில்லையே! அது கிடக்க; கவிதாசாதுர்யம் பெற்ற கவிகள் தங்களுடைய வாக்வைபவத்தை ஸார்த்தகமாக்கிக் கொள்ளவேணுமானால் இராமபிரானைத் தவிர்த்து வேறு எந்த வ்யக்தியைக் கொள்ளமுடியும்? என்பது இந்த ச்லோகத்தின் கருத்து. ப்ரஸந்நராகவகர்த்தா இக்கருத்தைச் சிறிது மேம்படுத்திக் கூறுகின்றார். ["ஸ்வஸூக்தீநாம் பாத்ரம் ரகுதிலகம் ஏகம் கலயதாம் கவீநாம் கோ தோஷ: ஸ து குணகணாநாம் அவகுண:, யதேதைர் நிச்சேஷை: அபரகுணலுப்தைரிவ ஜகதி அஸாவேகச் சக்ரே ஸததஸுகஸம்வாஸ வஸதி:] இந்த ச்லோகத்தின் கருத்தாவது:-(இதில் 'சக்ரே' (அகை) என்கிறக்ரியைகர்த்தரிரூபம்அன்று, கர்மணிரூபம்-செய்யப்பட்டானென்கை). கவிகளாய்ப் பிறந்தவர்களெல்லாரும் தங்கள் தங்கள் ஸூக்திகளுக்கு ஸ்ரீராகவனொருவனையே பாத்திரமாகக் கொள்வதானது கவிகளுடைய தோஷமன்று. ராகவனுடைய திருக்குணங்களின் தோஷமாகும். ஸகல குணங்களும் ஒன்று சேர்ந்து தாங்கள் நல்லதோர் ஆச்ரயம்பெற்று அதனால் மேன்மைபெறவேணுமென்று ஆசைப்பட்டு ஸ்ரீ ராகவனிடத்திலே வந்து சேர்ந்து இனிது வாழ்கிறபடியால் ஸ்ரீராகவனொருவனே கவிதாபாத்ரமாகிறானென்றபடி. ஸ்ரீ ராமாயணத்தில் எந்தவிடத்தில் கயிறுபோட்டுப் பார்த்தாலும் இராமபிரானுடைய திருக்குணங்களே மிகமிகக் காணலாகும். ஆரம்பத்திலுள்ள வால்மீகி நாரத ஸம்வாதம் குணப்ரசுரம். பிறகு அயோத்யாவாஸி ஜனங்கள் முகமாகவும் சூர்ப்பணகை, தாரை, மந்தோதரி முதலானார் முகமாகவும் வால்மீகி பகவான் வெளியிட்டுள்ள திருக்குணங்கள் அபரிமிதம். வையவந்த வாயாலே வாழ்த்துகிறபடி.

பெருமாள் இராவணனோடு போர் புரியும்போது " இன்று போய் நாளைவா " என்றதில் ஈடுபட்ட கூரத்தாழ்வான், (அதிமாநுஷ ஸ்தவத்தில்) "கோயம் குண: கதரகோடி கத: கியாந்வா கஸ்ய ஸ்துதே: பதம் அஹோ பத! கஸ்ய பூமி:" என்று வியக்கிறார். பட்டர் ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் "பரர்த்தி: பரமஸ்பஷ்ட:" என்பது முதலான பதினாறு திருநாமங்கள் இராமபிரானுடைய திருக்குணங்களைச் சொல்லுகின்றனவென்று வியாக்யானிக்கத்தொடங்குகையில் 'இத உபரி ம்ருதஸஞ்ஜீவனம்

Released by Maran's Dog ,Toronto, Canada http://acharya.org

ராம வ்ருத்தாந்த: ப்ரஸ்தூயதே' என்று அவதாரிகை இட்டருளுகிறுர். பல சொல்லி என்! திருவடி மோக்ஷ ஸாம்ராஜ்யத்தையும் வெறுத்து ராம குணுநுபவத் திற கென்றே சிரஞ்ஜீவி பட்டம் பெற்று இவ் விபூதியிலேயே விளங்கிவருகிறுர்.

திருவாய்மொழியில் (2-7-4) "தேவுந்தன்னையும் பாடியாடத் திருத்தி "என்ற விடத்து ஈட்டில் "தேவு மென்கிறது ஐச்வர்யத்தை. தன்னை என்கிறது ஆச்ரித பாரதந்த்ர்யத்தை. அதிறே தானுன தன்மை. 'ஆத்மா நம் நாதிவர்த்தேதா:' என்ருனிறே. ஆத்மபூதம் பரதம் நாதிவர்த்தேதா:' என்கிறுனென்று சிலர் சொல்லு வர்கள் "--என்றருளிச் செய்து அதைமறுத்து பட்டர் நிர்வஹித்ததை அற்புத மாக எடுத்துக்காட்டுகிறுர் நம்பிள்ளை சித்ரகூடத்தில் பரதாழ்வானுடைய ப்ரார்த் தனையைத் தலைக்கட்டி வைக்க வேணுமென்று கூறுகின்ற வஸிஷ்ட பகவான் 'ஆத்மா நம் நாதிவர்த்தேதா:' என்று கூறுவதானது ஆச்ரித பாரதந்த்ர்யமாகிற ஸ்வஸ்வபாவத்தை இழக்கலாகாது என்று சொல்லுவதாகப் பொருள் செய்தருளி, 'தேவுந்தன்னையும்' என்ற திருவாய்மொழிப் பாசுரத்தோடு ஸமந்வயம் செய்திருப்ப தானது நம் பூர்வாசாரியர்களுக்கன்றி மற்றெவர்க்கும் நில மன்று. ஸஹஸ்ரநாமத் தில் "விஜிதாத்மா விதேயாத்மா" என்றவிடத்தில் ஆதி சங்கராசாரியர் அவிதே யாத்மா என்று பதம் பிரித்து ரஸபங்கமாக வியாக்கியானம் செய்திருப்பதைத் தள்ளி 'விதேயாத்மா' என்றே பதம் பிரித்து பட்டர் செய்தருளியிருக்கிற வியாக்கியானம் இனிமையே வடிவெடுத்தது. அவருடைய திருத்தகப்பனுரான ஆழ்வான் 'அநந்யாதீநத்வம் தவ கில ஜகுர் வைதிககிர: பராதீநம் த்வாம் து ப்ரணத பரதந்த்ரம் மநுமஹே" என்கிற ச்லோகரத்னத்திஞல் எம்பெருமானுக்கு ஆச்ரித பாரதந்த்ர்யமே வடிவு என்பதை நிலைநாட்டியருளினர். பகவத்கீதையின் உள்ளே இறங்கினல் "அஹம் ஸர்வஸ்ய ப்ரபவ:" இத்யாதி ச்லோகங்களிஞல் அவனுடைய பரத்வம் வெளிவரக் கூடும். கீதையின் ஆரம்பத்தை நோக்கிஞல் அவனது இயற்கையான ஆச்ரித பாரதந்த்ர்யமே வெளியாகும். கீதையின் ஆரம்பம் என்ன? "ஸேநயோருபயோர் மத்யே ரதம் ஸ்த்தாபய மேச்யுத" என்று கூசாமல் சொல்லு கிருன் அர்ஜுநன். கண்ணபிரான் "என்னை நியமிக்க நீ யார்?" என்றுகேளாதே அப்படியே ஆஜ்ஞாபரிபாலனம் செய்திருக்கிருன்.

திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் இரண்டு திருமொழிகளிஞல் அற்புதமான அநுபவம் காட்டுகிறுர். பரத்வத்தை முன்னே அநுபவித்து ஸௌலப் யத்தைப் பின்னே காட்டுவது ஒரு பதிகம். ஸௌலப்யத்தை முன்னே காட்டிப் பரத்துவத்தைப் பின்னே காட்டுவது மற்றெரு பதிகம். (10-6) "எங்கானுமீதொப்ப தோர் மாய முண்டே" என்கிற பதிகத்தில் பாசுரந்தோறும் மூன்றேகால் அடிக ளால் அவனுடைய பரத்வத்தைப் பேசி "அவன் காண்மினின்ருய்ச்சியரால் அளை வெண்ணெயுண்டாப்புண்டிருந்தவனே" என்று ஸௌலப்யத்தைப் பேசித் தலைக் கட்டுகிறுர். அந்தப் பெரிய திருமொழி தன்னிலேயே (11-5) "மானமருமென் ஞேக்கிப் பதிகத்தில் ஒருத்தி முன்னடிகளால் ஸௌலப்யத்தையும் மற்றெருத்தி பின்னடிகளால் பரத்வத்தையும் பேசுவதாக வைத்து உபய குணங்களையும் அற்புத மாக அநுபவித்திருப்பது காண்க. இவையன்றே அநுபவ ரஸிகர்களின் படிகள்

http://acharya.org

எம்பெருமானுர் சரணகதி கத்யத்தில் திருவாபரண சூர்ணையில் "கிரீடமகுட சூடாவதம்ஸ" என்று திருமுடிக்கான திருவாபரணத்தை மூன்றுபடியாகப்பேசியுள்ளார். கிரீட மென்ருலும் மகுடமென்ருலும் சூடாவதம்ஸ மென்ருலும் ஒன்ருகவே கொள்ளலாம். அதை மூன்ருக்கியருளிச் செய்ததன் கருத்து யாதெனில்; நம்மாழ்வார் திருவிருத்தத்தில் 'பாரளந்த பேரரசே எம்விசும்பரசே எம்மை நீத்து வஞ்சித்தோரரசேயருளாய்" என்று மூன்று விஷயங்களுக்கு மகுடாபிஷேகம் செய்து 'அரசே! அரசே!! அரசே!!! என்று விளிக்கிருர். 'தாவியன்றுலகமெல்லாம் தலைவிளாக்கொண்ட' என்றபடி வஸிஷ்ட சண்டாள விபாகமற எல்லார் தலையிலும் திருவடிகளை வைத்துப் பாரளந்ததனுல் ஸௌலப்யத்தைக் காட்டி யருளினன். விசும்பரசே என்பதனுல் பரத்வம் காட்டினபடியை விவரிக்க வேண்டுமோ! 'எம்மை நீத்து வஞ்சித்தோரரசே' என்பதனுல் ப்ரணயித்வகுணம் காட்டப்பட்டதாக ஆசாரியர்களின் வ்யாக்யானம்.

— என்னுடைய நூற்றுக்கணக்கான அநுபவங்களில் சில கேளீர்! —

1. தாயெடுத்த சிறு கோலுக்கு உளைந்தோடுங் கண்ணன் ததிபாண்டனைச் சரணமடைந்து தயிர்த்தாழியிலே மூச்சுத்திணறிக்கிடந்தது ஒருபுறம்=உனக்கும் உன் தயிர்த்தாழிக்கும் உன்னைச் சார்ந்த இருபது மனைக்காரர்களுக்கும் மோக்ஷமளித்தேனென்பது ஒருபுறம்.

2. அட்டுக்குவி சோற்றுப் பருப்பதமும் தயிர்வாவியும் நெய்யளறுமடங்கப் பொட்டத்துற்றி மழைவந்தெழுநாள் பெய்வித்துக் கொடியேறு செந்தாமரைக் கைவிரல்கள் கோலமுமழியாதே வாடாதே வடிவேறு திருவுகிர் நோவாமே குன்றமொன்றெடுத்தேந்திநிற்பது ஒருபுறம்—"தேவோ வா தானவோ வா த்வம் யக்ஷோ கந்தர்வ ஏவ வா? என்று வினவினரைச் சீறி "அஹம் வோ பாந்தவோ ஜாத:" என்றது மற்றொருபுறம்.

3. ரதியாயிருக்கவேண்டிய தான் தேரோட்டி யென்னும் ஸாரதியாய் நின்று குருக்ஷேத்ரத்திற்குத் தேரோட்டிக்கொண்டு செல்லுகிருன்; வழியிடையே பாலைநிலம் குறுக்கிட்டது; குதிரைகள் விடாய்த்தன; ரதிகளாயிருக்கின்ற பாண்டவர்களும்விடாய்த்துக்கத்துகின்றனர். அப்போதுஎன்ன நடந்தது? பெரியாழ்வார்ஸாதிக்கிருர் (பெரியாழ்வார் திருமொழி (4-2-7) "மன்னர் மறுக மைத்துனன்மார்க்கொரு தேரின்மேல், முன்னங்குநின்று மோழை யெழுவித்தவன் மலை" —இந்த சரித்திரம் பெரியாழ்வாரொருவரே பணித்தது. குருக்ஷேத்திரத்தில் அது .... இற்றைக்கும் காட்டப்படுமிடம். இப்படியாகப் பரத்வமும் ஸௌலப்யமும் கலந்து பரிமாறும் ஸ்ரீ க்ருஷ்ணுவதாரத்தில் எதை விடுவது? எதை யநுபவிப்பது?

நம்மாழ்வார் திருவாய்மொழியில் (5-10.) "பிறந்தவாறும் வளர்ந்தவாறும்" என்று க்ருஷ்ணுவதார சரிதைகளை யநுபவிக்கத் தொடங்கினுர். முதற் பாட்டு கேட்டவுடனே எம்பெருமான் ஓடிவந்து 'ஆழ்வீர்! என் சரிதைகளில் உமக்கு எது மிகவினிது?' என்று வினவ, "அது விது வுது என்னலாவனவல்ல என்னை உன்

http://acharya.org

செய்கை நைவிக்கும்* என்றாராழ்வார். இதையே கூரத்தாழ்வான் ஸுந்தர பாஹுஸ்தவத்தில் *இங்கிதம் நிமிஷிதஞ்ச தாவகம் ரம்யமத்புதம் அதிப்ரியங்கரம்* என்று மொழிபெயர்த்தாப்போலருளிச் செய்தனர். ஆழ்வார் பாசுரத்தில் *உன்செய்கை* என்றது உயிர். ஆழ்வான் ஸ்ரீ ஸூக்தியில் (தாவகம்) என்றது ஜீவநாடி.

நிகமனம்:—என்னுடைய பரமாப்தர்களான கரியமாணிக்கம் ஸ்ரீமான் R. ராதாக்ருஷ்ணன் முதலானாருடைய நிர்ப்பந்தமான ஆஹ்வானத்தைப் பலகால் பெற்றிருந்த நான் ஆமூருக்கு நேரில் வந்து இவ் விஷயங்களைப் பரக்க உபந்யஸிக்க மநோரதித்திருந்தும் உடல் நிலை இடந்தாராமையாலே என்னுடைய வாசிக கிஞ்சித்காரத்தைஇப் பத்ரிகை மூலமாகத் தலைக்கட்டிக்கொண்டபடி.

ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம். *அண்ணங்கராசாரியர்.*

(குறிப்பு) ஸ்ரீ ஸ்வாமி 22-1-75 பின்மாலை சயனத்திலிருந்தபடியே ஸாதித்துவர அதை யடியேன் அப்படியே எழுதி யச்சிடுவித்து ப்ரசுரிக்கலானேன். நேர்ந்துள்ள பிழைகளைப் பொறுத்தருள்வது. தி. அ. அனந்தாழ்வான்.

25—1—75.

ரதஸப்தமியும் – ஒரு விநோதமும்

18—2—75 செவ்வாய்க்கிழமை யன்று ரதஸப்தமி மஹோத்ஸவம். அன்று காலையிலும் மாலையிலும் தேவப்பெருமாளுக்கு இவ்விடத்தில் நான்கு மாடவீதிகளிலும் மிகப் பெரிய உத்ஸவம் நடைபெறுவது நடைபெற்றது. சில நாட்களாய் உத்ஸவாதிகளையநுபவிக்க ப்ராப்தி யற்ற அடியேன் க்ருஹத்தினுள்ளிருந்தபடியே ஸேவித்திருந்தேன். அதிக பரிசயமில்லாத ஒரு ஸ்வாமி (காலை 8-மணிக்கு) உள்ளே வந்து "திருமேனி பாங்கில்லை யென்று கேள்விப்பட்டேன்; அடியேன் பள்ளிகொண்டை ஸமீபத்தில் ஸ்கூல் டீச்சராகப் பணிசெய்யும் தமிழ் வித்வான்; ரதஸப்தமியைப்பற்றி ஒரு கட்டுரை யெழுத அவசியம் ஏற்பட்டிருக்கிறது. திவ்யப் பிரபந்தங்களில் தேரைப் பற்றி வரும் பாசுரங்கள் ஏழு ஸாதித்தருளவேணும்'' என்றார். ''ஏழு என்ன? எழுபதும் எழுநூறும் சொல்லுகிறேன்'' என்றேன். ''வேண்டாம் வேண்டாம்; ரதஸப்தமியைப்பற்றி எழுத உத்தேசமாகையால் ஏழே போதும்'' என்றார். அவர் கையில் காகிதமும் பேனாவும் வைத்துக் கொண்டிருந்தார்; ''சொல்லி வருகிறேன், எழுதிக் கொள்ளும்'' என்றேன். 'இன்ன ஆழ்வார், இன்ன இடத்தில் என்பதையும் ஸாதிக்கவேணும்' என்றார். அப்படியே சொல்லி வந்தேன். அது வருமாறு.

1. * தப்பின பிள்ளைகளைத் தனமிகு சோதிபுகத் தனியொரு தேர்கடவித் தாயொடு கூட்டிய. * [பெரியாழ்வார் திருமொழி [1—5—7]

2. * உருப்பிணிநங்கையைத் தேரேற்றிக் கொண்டு.* (பெரியாழ்வார் திருமொழி 3—9—3.)

http://acharya.org

3. * மாதலி தேர் முன்புகோல் கொள்ளமாயனிராவணன்மேல். * [நாச்சியார் திருமொழி (5—3.)

4. * களிறுமிழ்ந்து தேரொழிந்துமாவொழிந்துவனமே மேவி * [பெருமாள் திருமொழி 9 2]

5. * தேரும் போயிற்றுத் திசைகளும் மறைந்தன செய்வதொன்றறியேனே. * [பெரிய திருமொழி 8—5—2]

6. * உலக்கத்தேர்கொடு சென்றமாயமு முட்டட மற்றும் பல. * [திருவாய்மொழி 6—4—9.]

7. * மாயனன்று ஐவர் தெய்வத்தேரினில் செப்பிய கீதையின் செம்மைப்பொருள்தெரியப்பாரினில்சொன்ன விராமாநுசன் * [இராமாநுசநூற்றந்தாதி-68] இவை கேட்க வந்தவர் தமது கையில் நாலாயிர திவ்யப்ரபந்த புத்தகமும் கொண்டுவந்திருந்தார். அநாயாஸமாக அதில் குறிப்பெடுத்துக்கொண்டு 'ஸந்தோஷம்! பரம ஸந்தோஷம்!!' என்று சொல்லிச் சென்றார்.

'ரதஸப்தமியைப்பற்றி இப் பாசுரங்கள் கொண்டு எவ்விதமான கட்டுரையெழுதப் போகிறீர்?' என்று கேட்டேன்; 'மறுபடியும் விரைவில் விடைகொண்டு விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்' என்று சொல்லச் சென்றுவிட்டார்.

ஸ்ரீ காஞ்சி ஜீயர் ஸ்வாமியின் பரமபத ப்ராப்தி

கோயில், திருமலை, திருநாராயணபுரம் முதலான திவ்ய தேசங்களிற்போல பெருமாள் கோயில் என்கிற காஞ்சீபுரத்திலும் திவ்யதேச பரிபாலனத்தற்காக ஒரு ஜீயர் ஸ்வாமி நெடுநாளாகவே எழுந்தருளியிருப்பதுண்டு. அவருடைய திருநாமம் (வாதிகேஸரி) அழகிய மணவாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி என்பது. அந்த ஜீயர் ஸ்வாமியினால் தேவப்பெருமாள் தேவஸ்தானத்திற்கு அனேக கைங்கரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. இவர் தேவராஜஸ்வாமி தேவஸ்தானத்தின் தர்ம கர்த்தாவாக (1553) இருந்திருக்கிறார். திருப்பாணாழ்வார் தொண்டரடிப்பொடியாழ்வார் ஸன்னிதிகளுக்கும் கைங்கரியங்கள் செய்திருக்கிறார். இம்மடத்து சிஷ்யரான கந்தாடை ராமாநுஜ ஐயங்காரும் இந்த தேவஸ்தானத்திற்குப் பற்பல அரிய திருப்பணிகள் செய்துள்ளார். (ஸ்ரீராமாநுஜன் 314 காண்க.) மூல புருஷர் சிறந்த வித்வானாகவும் எழுந்தருளி யிருந்தார் அனேக க்ரந்தங்கள் அருளிச் செய்தவர். "ஸ்ரீ பாஷ்ய த்ரமிடாகமாத்யதசக த்வந்த்வைக கண்ட்யம்" என்கிற க்ரந்தம் மிக உயர்ந்த க்ரந்தம். ப்ராசீன பகவத் விஷய ஸ்ரீ கோசங்களில் தெலுங்கு லிபியிலும் மணிப்ரவாள லிபியிலும் அச்சிடப்பட்டுமிருக்கிறது. அந்த ஜீயர் ஸ்வாமியின் மடம் கீழகோபுர வாசலில் உள்ளது. கோயில் திருமலைகளிற் போல இந்த ஜீயர் ஸ்வாமிக்கும் தேவப்பெருமாளுடைய தேவஸ்தானத்தில் கைங்கர்ய விசேஷங்களும் தத்ப்ரயுக்தமான மர்யாதா விசேஷங்களும் ஏற்பட்டிருந்தன. தற்காலத்தில் கலா வைஷம்

http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

யத்தினுல் ஏதோ மாறுபாடடைந்திருக்கிறது. அதுபற்றி இப்போது விசார மில்லை. ஆண்டு தோறும் தைமீ ஸங்கராந்தியன்று சீவரம் பரிவேட்டை யென்று உத்ஸவம் நடந்து வருகின்றகே. அதுசீவரமன்று, ஜீயர்புரம். அந்த மண்டபமும் அந்த வுத்ஸவமும் இந்த ஜீயர் ஸ்வாமியினுல் ஏற்படுத்தப் பட்டதென்று பெரியோர்கள் பரம்பரையாகக் கூறுவர்கள். ஜ்ஞாநாநுஷ்டாள ஸம் பந்நர்களான பல ஜீயர் ஸ்வாமிகள் இவ்வாஸ்தானத்தை அலங்கரித்தருளி யிருக் கிறர்கள். அடியேனுக்குப் பூர்வாச்ரம மாதாமஹரான ஷஷ்டி ஜீயர் ஸ்வாமி (அதாவது சதுஷ்ஷஷ்டி கலாவல்லப ஜீயர்ஸ்வாமி) முதலாக ஐந்து திருநாமங்கள் இந்த மடாதிபதிகளாக எழுந்தருளி யிருந்ததை அடியேனறிவேன். கடைசியாக கர்நாடகப்ராநதம் மண்டயாவில் ஜ்ஞாநாநுஷ்டான ஸம்பந்நராக எழுந்தருளி யிருந்த ஸ்ரீமதுபயவே. முடும்பை ராமாநுஜாசாரியரைப் பிரார்த்திக்க அவர் ஏறக் குறைய இருபது ஸம்வத்ஸரகாலம் ஆஸ்ததானத்தை அலங்கரித்திருந்து சென்ற கார்த்திகை மாதத்தில் திருநாராயணபுர ப்ராந்தத்திற் கெழுந்தருளி திருமேனி அபாடவத்தினுல் 28—1—75ல் அங்கேயே திருநாடலங்கரிக்கலாயிற்று.

Released by Maran's Dog ,Toronto, Canada

மாசிப்புனர்பூசத்தின் அநுபவம்

குலசேகராழ்வார்க்கு என்ன தெரியும் ?

சென்ற வருஷம் பங்குனி விசாக நிகழ்ச்சியில் ஒரு நாள் குலசேகராழ்வா ரைப் பற்றி அடியேன் உபந்யஸிக்க நேர்ந்தபோது குலசேகராழ்வார்க்கு என்ன தெரியும் என்று விஞவாக ஒரு மகுடம் வைத்து 'அவருக்கு அழத் தெரியும்' என்று விடை யிறுத்து சிறியதோருபந்யாஸம் செய்தேன். அதைச் சிறிது விவரிக் கிறேன்.

அழுகை என்பது இரண்டு விதம். தாமாக அழுவது ஒரு விதம். பிறருடைய அழுகையை அநுகரித்துத்தாம் அழுவது மற்ருெரு விதம். இவ்விரண்டு விதமான அழுகையும் குலசேகராழ்வாரிடத்து விசேஷமாகக் காணப்படுகிறது. இவருடைய பெருமாள் திருமொழி பத்துப் பதிகங்கள் கொண்டது. அதில் முதற்பதிகமான *இருளிரியச் சுடர்மணிகளிமைக்கும் நெற்றி என்கிற தசகத்தில் "திருப்புகழ்கள் பலவும் பாடி ஆராதமனக்களிப்போடழுத கண்ணீர் மழைசோர நினைந்துருகி யேத்தி" (9) என்பது முதலான பாசுரங்களில் தாமாக அழுதமை விளங்கும்.

*ஆலைநீள் கரும்பென்கிற ஏழாவது பதிகத்திலும் *வன்தாளினிணை வணங்கி என்கிற ஒன்பதாவது பதிகத்திலும் பிறருடைய அழுகையைத் தாம் அநு கரித்து அழுதமை விளங்கும். 'ஆலைநீள் கரும்பு பதிகத்தின் நிகமனப்பாசுரத்தில் தெய்வத்தேவகி புலம்பிய புலம்பல் குலசேகரன் சொன்னது என்றும் *வன்தாளி ளிணைப் பதிகத்தின் நிகமனப் பாசுரத்தில் 'ஏரார்ந்த கருநெடுமாலிராமனுய் வனம் புக்க வதனுக்காற்ருத் தாரார்ந்த தடவரைத்தோள் தயரதன் தான் புலம்பிய அப்புலம்பல் தன்னை ...... குலசேகரன் சொற்செய்த தென்றும் புலம்பல்களின்

Released by Maran's Dog ,Toronto, Canada http://acharya.org

ப்ரமேயத்தைத் தாமே வெளியிட்டருளினார். தேவகியின் புலம்பல் ஸ்ரீ விஷ்ணு புராணாதிகளிலும் தயரதமன்னவன் புலம்பல் ஸ்ரீராமாயணத்திலும் உள்ளதாயினும் அவற்றைப் பாராயணம் பண்ணும்போது நமக்கு எவ்விதமான மனோவிகாரமும் ஏற்படுவதில்லை. மேலே எடுத்துக்காட்டிய குலசேகரப்பெருமாளுடைய திருமொழிகளை ஸேவிக்குங்காலங்களில் கல்நெஞ்சும் கரைகின்றது. முந்தின பதிகத்தின் ப்ரமேயத்தைச் சிறிது விவரிக்கிறேன். "மக்களறுவரைக் கல்லிடை மோத இழந்தவள் தன் வயிற்றில் சிக்கென வந்து பிறந்து நின்றாய்" (பெரியாழ்வார் திருமொழி 5-3-1ல்) என்கிற படியே அஷ்டம கர்ப்பம் கண்ணபிரானாகத் திருவவதரித்தபோது "ஜாதோஸி தேவ தேவேச சங்கசக்ர கதாதர உபஸம்ஹர விச்வாத்மந் ரூபம் ஏதத் சதுர்புஜம்" இத்யாதிகளைச் சொன்னவர்கள் வஸுதேவ தேவகீதம்பதிகள். இதனால். சங்க சக்ர கதாதரனாயவதரித்தவன் பரமபுருஷனே யன்றி ஸாமாந்ய மனிதனல்லன் என்பதையவர்கள் தெரிந்து கொண்டவர்கள் என்பது நிஸ்ஸந்தேஹமாகத் தேறும். ஆகவே அவனை "உபஸம்ஹர விச்வாத்மந் ரூபமேதத் சதுர்புஜம்" என்று சொல்லி ப்ரார்த்திக்கவும் "வஸுதேவோ வஹந் க்ருஷ்ணம் ஜாநு மாத்ரோதகோ யயௌ" என்னும்படி யமுனையைக் கடந்து திருவாய்ப்பாடியிலே கண்ணனைக் கொண்டு சேர்க்கவும் ஆவச்யகதையில்லை. ஆயினும் தாங்களே கொண்டுவிட்டுப் பிறகு புலம்புவது ஆச்சர்யமானதொரு ஸம்பவம். அதனைக் குலசேகராழ்வார் தேவகீ வேஷம் பூண்டு பேசித் தாம் புலம்புவது மிக ஆச்சர்யம். இப்பதிகத்தில் வெளிவருகின்ற விஷயங்கள் தேவகீ வஸுதேவர்களின் இழவு ஒன்று, நந்தகோப யசோதைகளின் அற்புதமான பெரும்பேறு மற்றொன்று. இவையிரண்டும் இப்பதிகத்தில் தலை சிறந்து விளங்குவன.

பிந்தின தயரதன் புலம்பலின் காரணம் உலகப்பிரசித்தம். பிள்ளை லோகாசாரியர் முமுக்ஷுப்படியில் "சக்ரவர்த்தியைப் போலே இழக்கைக்கு உறுப்பு" என்றருளிச் செய்தபடி ஸித்த தர்மமான எம்பெருமானை விட்டு ஆபாஸ தர்மத்தில் ஆசை வைத்த மன்னவன் அழுவதானது தன்னுடைய தவறுதன்னைத் தான் உணராமையினாலாகும். கைகேயி எவ்வளவு நிர்ப்பந்தமாகக் கோரினாலும், "அம்மா! உனக்கு நான் கொடுத்த வரம் என்றைக்கோ; அதுவும் இன்னதென்று குறிப்பிடப்படவில்லை. ஸ்ரீராமபிரானை நேற்று மாலை நான் வரவழைத்து ஒரு முறைக்கு இரு முறையாக உனக்கு அரசு கொடுத்தேனென்று சொல்லியிருக்கிறேனாகையால் இவ் வார்த்தையை நான் தவறமாட்டேன்" என்று பிடிவாதமாகச் சொல்லலாமாயிருக்க அப்படி சொல்லாமல் பெருமாளநுபவத்தை இழந்ததானது ஆபாஸ தர்மத்தில் ருசியினாலாகுமத்தனை.

இவ் விஷயங்களைச் சென்ற வருஷம் அடியேனுடைய க்ருஹத்தில் உபந்யஸித்தபோது திருவெவ்வுளூரிலிருந்து எழுந்தருளியிருந்த ஸ்ரீமதுபயவே பழவேரி க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, "குலசேகராழ்வார்க்கு என்ன தெரியும்! என்கிற வினாவும் 'அவருக்கு அழத்தான் தெரியும்." என்கிற விடையும் அதன் விவரணமும் வல்வினையேனை ஈர்கின்றது." என்று மிகவும் ஈடுபட்டுப் பேசினார்.

http://acharya.org

1. சென்னை ஸத்காலக்ஷேப ஸபையின் ஆதரவில் ஸ்ரீமதுபயவே. ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமிகள் நிகழ்த்திய (45வது) திருப்பாவை சாற்றுமுறையன்று (13-1-75) சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் உயர்திரு. A. அழகிரிசாமியவர்களும் சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் உயர்திரு V. சேதுராமையர் அவர்களும் ஸ்ரீஸ்வாமியுடன் அமர்ந்திருக்கும் காட்சி.

2. ஸத்காலக்ஷேப ஸபையின் உறுப்பினர்களுடனும் அன்பர்களுடனும் ஸ்ரீ ஸ்வாமி வீற்றிருக்கும் காட்சி.

http://acharya.org

அக்நிஹோத்ரியார் ஆழ்ந்து கவலிப்பது.

(ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் ஸ்வாமியின் தக்ஷிணபாஹுவான
M. A. வெங்கடகிருஷ்ணமாசாரியர் எழுதுவது.)

25—2—75 தேதியன்று ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமியை ஸேவிக்க அடியேன் ஸ்வாமி ஸன்னிதிக்கு விடைகொண்டேன். அதே ஸமயத்தில் தபாலில் வந்த ஒரு பத்ரிகையைக்கண்டேன். அதாவது காஞ்சி ஜகதாசார்ய ஸிம்ஹாஸனாதிபதியின் பொன்மொழிகளைக் காண்மின்! கேண்மின! தெளிமின் "இரண்டாவது வெற்றி" என்ற தலைப்புடைய ஒரு Pamphlet. அது சின்ன இரண்டரைபேஜ்தான் உள்ளது. முடிவில் கு. ராமானுஜன் என்கிற கையெழுத்தைக் கண்டதனாலும் எழுதப்பட்டுள்ள விஷயத்தின் போக்கைக் கண்டதனாலும் கூடந்தை (அக்நிஹோத்ரம்) ராமாநுஜாசாரியர் எழுதி வெளியிட்டதாக இருக்கவேணுமென்று கருதலாயிற்று. சில மாதங்களாக ஸ்ரீராமாநுஜனில் ஸ்ரீ ஸ்வாமி எழுதி வெளியிட்டுவரும் திவ்ய ப்ரபந்த மஹாநிதி என்கிற யதார்த்தமஹாநிதிக்ரந்தத்தில் உகர வரிசையில் (பக்கம் 89) உபயவேதாந்த ப்ரவர்த்தகாசார்யர் என்கிற தலைப்பின் கீழ் அருமையான சில விஷயங்களை ஸ்ரீ ஸ்வாமி எழுதியிருந்தார். அவற்றை இங்கேயெல்லாருங்காண உதாஹரிக்கிறேன்

உபயவேதாந்த ப்ரவர்த்தகாசார்யர் எம்பெருமானார் தரிசனத்தைச் சேர்ந்தவர்களான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு 'உபய வேதாந்த ப்ரவர்த்தகாசார்யர்' என்கிற விருது அஸாதாரணமாயிருக்கும். இந்த விருது ஸ்ரீமந்நாதமுனிகள் (அல்லது) ஆளவந்தார். (அல்லது) எம்பெருமானார் காலத்திலிருந்து வழங்குவதாகும். ஸ்ரீவைஷ்ணவர்கள் ஒருவருக்கொருவர் கடிதமெழுதும்போது இந்த விருதை யிட்டேயாகவேணுமென்பர் பெரியோர். அப்படியே நிகழ்ந்துவருகின்றதெங்கும். இதைப் பூர்த்தியாக எழுத இயலாதபோது (ஸ்ரீஉவே) என்றோ (*ஸ்ரீமதுபயவே*) என்றோ எழுதியே வருகிறார்கள். இங்குச் சிலர் வாதிப்பதொன்றுண்டு; உபய வேதாந்தமும் அதிகரிக்கவேணுமென்று என்ன நிர்ப்பந்தம்? வடமொழி வேதாந்தத்தில் அதிகாரிகளாகக்கூடியவர்கள் அதை அதிகரித்து அதற்கு ப்ரவர்த்தகர்களாகட்டும்; அதற்கு அதிகாரிகளாகப்பெறாதவர்கள் த்ராவிட வேதாந்தத்தையதிகரித்து இதற்கு ப்ரவர்த்தகர்களாகட்டும். ஸம்ஸ்க்ருத வேதாந்தத்திலுள்ள அர்த்தங்கள் தானே த்ராவிட வேதாந்தத்திலுள்ளது. பாஷாபேதமேயொழிய அர்த்தபேதமில்லையே ஆகவே ஏதேனுமொரு வேதாந்தத்தைமட்டும் அதிகரித்தால் போதுமல்லவா? என்று. இப்படி வாதிப்பவர்கள் பலருண்டு; வாதிப்பவர்களில்லையெனினும் ஸந்தேஹிப்பவர்களுள்ளார்களென்று கொண்மின். இதற்குச் சொல்லுகிறோம். இந்த உபயவேதாந்தத்தை ஸாகாங்க்ஷவேதாந்தம், நிராகாங்க்ஷவேதாந்தம் என்கிற பெயர்களையிட்டும் வ்யபதேசிக்கலாம். ஸம்ஸ்க்ருத வேதாந்தம்—ஸாகாங்க்ஷ வேதாந்தம். த்ராவிட வேதாந்தம் நிராகாங்க்ஷ வேதாந்தம். (இதனை விவரிக்கிறோம்.) ஸம்ஸ்க்ருத வேதாந்தமாவது—சாரீரக மீமாம்ஸை என்கிற ப்ரஹ்மஸூத்ரமும் அதன் பாஷ்யமுமாகும். த்ராவிட வேதாந்தமாவது — திவ்யப்ரபந்த — தத்வ்யாக்யான ரஹஸ்யங்களாகும். ஸம்ஸ்க்ருத வேதாந்தத்தில் காணக்கிடைக்காத அர்த்தங்கள் பலவுண்டு; (எவையென்னில்;)

http://acharya.org

சாரீரகமீமாம்ஸையானது பகவானை ஆதியோடந்தமாக ப்ரஹ்மம்—பரப்ரஹ்மம் என்றதேயல்லது ஓரிடத்திலும் நாராயண வாஸுதேவ விஷ்ணு சப்தங்களையிட்டுச் சொல்லிற்றில்லை. அவனை லக்ஷ்மீபதியாகவும் சொல்லிற்றில்லை; அவன் ராம க்ருஷ்ணாத்யவதாரங்கள் செய்தருளுகிறானென்றும் சொல்லிற்றில்லை; அவன் க்ஷமா தயா வாத்ஸல்யாதி கல்யாண குணங்களையுடையவனென்றும் விவரித்துச் சொல்லிற்றில்லை. கைங்கர்யமே பரம புருஷார்த்தமென்றும் சொல்லிற்றில்லை. ப்ரபத்தியோ ஆசார்யாபிமானமோதான் தஞ்சமென்றும் சொல்லிற்றில்லை. [இன்னமும் விவரித்துக்கூற வேண்டா] இவையெல்லாம் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்கு இன்றியமையாத அர்த்த விசேஷங்களேயன்றோ. இவற்றைப் பெரும்பாலும் எம்பெருமானார் கத்யத்ரய மென்னும் க்ரந்தத்திலே ஸுஸ்பஷ்டமாக அருளிச் செய்துள்ளார். எது கொண்டு அருளிச் செய்தார் தெரியுமோ? அருளிச் செயல் கொண்டே (அதாவது—த்ராவிடவேதாந்தங் கொண்டே) யருளிச் செய்தார் என்னத் தட்டில்லை. இதை மேலே எகரவரிசையில் எம்பெருமானார் என்னுந் திருநாமத்தின் விவரணத்திலே மிக விளக்குவோம். ஸம்ஸ்க்ருத வேதாந்தம் ஸாகாங்க்ஷவேதாந்தம் (அல்லது ஸாபேக்ஷ வேதாந்தம்) என்றும், த்ராவிட வேதாந்தமானது — நிரபேக்ஷ வேதாந்தமென்றும் நிர்தேசிக்கத்தக்கதாயிற்று. அப்படியானால் நிரபேக்ஷமான த்ராவிட வேதாந்தமொன்றே போதுமே ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு—என்கிற வாதம் தோன்றும். "உளன்சுடர்மிகு சுருதியுள்" என்று ப்ரதமாசார்யரும், "ஆழ்வார்கள் வாழி அருளிச் செயல் வாழி....செய்யமறை தன்னுடனே சேர்ந்து" என்று சரமாசார்யரும் அருளிச் செய்திருக்கையாலே ஸம்ஸ்க்ருத வேத வேதாந்தங்கள் விடத்தக்கவையல்ல. ஆசார்ய ஹ்ருதயத்தில் கீதைக்கு ஏற்றம் சொல்லும்போது "பகவன் ஞானவிதிபணிவகையென்று இவ ரங்கீகாரத்தாலே அதுக்கு உத்கர்ஷம்" என்றருளிச் செய்த கணக்கிலே "சுடர்மிகு சுருதியென்று இவரங்கீகாரத்தாலே வடமொழி மறைமுடிக்கு உத்கர்ஷம்" என்று பணிக்கத்தகும்.

இதன் ப்ரமேயம் என்னவென்றால் ஸ்ரீபாஷ்யாதி ஸம்ஸ்க்ருத வேதாந்த க்ரந்தங்களில் பரிசயம் செய்பவர்கள் த்ராவிட வேதாந்தமான பகவத் விஷயாதிகளிலும் பரிசயம் செய்தேயாகவேணும் என்பதை உபபத்திகளுடன் விவரிப்பதேயாகும். இதை உள்ளபடி க்ரஹிக்கமாட்டாத அக்நிஹோத்ரிகள் தத்தகபித்தகதாலேலோ என்கிற முறையில் ஏதோ எழுதிவெளியிட்டிருக்கிறார். காஞ்சீபுரம் ஸ்வாமி இரண்டொரு மாதகாலமாய் திருமேனி பாங்கில்லாமல் சயனித்திருப்பதால் இதை எங்கே அவர்கடாக்ஷிக்கப் போகிறார் என்றும் இதற்கு யார் என்ன எழுதப் போகிறார்கள் என்றும் லகுவாக நினைத்த இவர் அஸம்பத்தமாக எழுதியிருப்பதைப்பற்றிச் சுருக்கமாக ஆராய்ச்சி செய்கிறேன். அடுத்த மாதத்திற்குள் ஸ்ரீஸ்வாமி திருமேனி பாங்காகி இன்னமும் விளக்கமாக வெளியிட்டருள்வர். இப்போது அடியேன் சுருக்கமாக எழுதுவதும் ஸ்ரீஸ்வாமி யருகேயிருந்து சில விஷயங்களைக் கேட்டுக்கொண்டே யெழுதுகிறேன்.

சாரீரகமீமாம்ஸையில் எந்தெந்த விஷயங்கள் சொல்லப்படவில்லை என்று ஸ்ரீஸ்வாமி யெழுதியிருக்கிறாரோ அந்தந்த விஷயங்கள் அதில் உள்ளன வென்று

http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

ஆக, இந்நிலத்திலுள்ள சேதநர்கள் பத்தர், முமுக்ஷுக்கள், முக்தப்ராயர், என மூன்று வகுப்பினரென்றதாயிற்று. இவர்களுள் பத்தரையும் முக்தப்ராயரையும் விட்டிட்டு முமுக்ஷுக்களை யெடுத்துக் கொள்வோம். முமுக்ஷுக்கள் நித்ய முக்தர் களிற் காட்டிலும் மிகச்சிறந்தவர்களென்று குலாவப்படுகிறுர்கள். நம்மாழ்வார் திருவிருத்தத்தில் (79) 'வேதனை வெண்புரிநூலனை சீதனையே தொழுவார் விண்ணு ளாரிலுஞ் சீரியரே' என்றருளிச் செய்கிறுர். இந்நிலத்திலிருந்து கொண்டு எம்பெருமானை யநுபவிக்கப் பெறுமவர்கள் பரம பதத்திலுள்ளவர்களிற் காட்டிலும் சிறப்புடையர் என்கிறுர். இடைவிடாது பகவதநுபவம் செய்வதற்கென்றே வாய்த்த இடமான பரமபதத்தில் பகவதநுபவத்திற்கு எவ்வகையான இடையூறுமில்லையாதலால் அங் கிருந்து கொண்டு பகவானை யநுபவித்தல் வியப்பன்று; உண்டியே உடையே உகந் தோடு மிம்மண்டலம் பகவதநுபவத்திற்கு நேர்விரோதியாதலால் அப்படிப்பட்ட இந்த இருள்தருமா ஞாலத்திலிருந்து கொண்டே அங்ஙனம் நித்யாநுபவஞ் செய் தலில் மிக அருமையுண்டாதலால் அவ்வருமையைப் போக்கி எம்பெருமானை யநுபவிக்குமவர்களை நித்ய முக்தர்களிலும் மேம்பட்டவர்களாகக் கூறத் தடை யுண்டோ? ஒருசிறந்தகாரியத்தைப் பிரதிபந்தகமில்லாதவிடத்தில் தலைக்கட்டுதலிற் காட்டிலும் பிரதிபந்தகம் மலிந்த விடத்தே தலைக்கட்டுதல் வியக்கத் தக்கதன்றே. 'பாவியேனைப் பல நீகாட்டிப்படுப்பாயோ' என்றும் 'கிறிசெய்தென்னைப் புறத் திட்டு இன்னங் கெடுப்பாயோ' என்றும் 'உண்ணிலாவிய ஐவரால் குமை தீற்றி என்னையுன் பாதபங்கயம் நண்ணிலாவகையே நலிவான்' என்றும் மாஞானிகளுங் கூடக் கதறுமிடத்திலே யிருந்துகொண்டு முமுக்ஷுக்களாயிருக்குமவர்கள் உண் மையில் மிக மேம்பட்டவர்களேயாவர். Released by Maran's Dog ,Toronto, Canada

இந்த மேம்பாட்டுக்கு மற்ருெரு காரணமுமுண்டு; இடையூறு ஒன்றுமில்லாத தான உயர்நிலத்தில் பண்ணக்கடவதான அநுபவத்தை இடையூறுகள் மலிந்த இந் நிலத்திலே பண்ணுவது சிறந்தது என்பது கிடக்கட்டும். மற்ருென்று ஆழ்ந்து பார்க்கவேண்டியதுண்டு இங்கு. பரமபதத்தில் அநுபவமுள்ளதென்றும் இந்நிலத் தில் அநுபவ மநோரதமுள்ளதென்றும் அறிந்திருக்கிறீர்கள். அநுபவம் சிறந்ததா, மநோரதம் சிறந்ததா? என்று விமர்சிக்குமளவில், இஷ்டமான விஷயத்தை அநுபவிப்பதிற்காட்டிலும் அநுபவிப்போமென்னும் மநோரதமே சிறந்ததா மென்பதை அநுபவ ரஸிகர்கள் எளிதிலுணர்வர். தேனூறி யெப்பொழுதும் தித்திக்குமபடியானது மநோரதமேயாம். திருவரங்கஞ்சென்று திருவத்யயநோத் ஸவம் ஸேவிக்க வேணுமென்று ஒருவற்கு ஆவல் இருப்பதாக வைத்துக்கொள்க. ஒரு விசை சென்று ஸேவித்து வந்துவிட்டால் அவ்வளவிலே ஆசை தீர்ந்து விட்ட தாகும். மநோரதமாய்ச் செல்லுமாகில் அது அநுபவபர்யந்தம் ரஸத்தமா யிருக்கும். சந்தனம் பூசிக்கொள்ளுதல், புஷ்பம் சூட்டிக்கொள்ளுதல் முதலிய அலங் கார காரியங்களில் பிரமசாரிகளுக்குள்ள ஆவல் க்ருஹஸ்தர்களுக்கு இல்லாமையும் இங்கு ஒரு உதாஹரணமாகக் காட்டத்தகும்.

திருச்சந்த விருத்தத்தில் திருமழிசைப் பிரான் "அயனரன்றாடினேடு நாட்டமாயிரத்தனேடு நண்ணினும், வீடதான போகமெய்தி வீற்றிருந்தபோதிலும், கூடுமாசை யல்லதொன்று கொள்வனே குறிப்பிலே" என்றருளிச் செய்கிறுர், வீடதான

Released by Maran's Dog ,Toronto, Canada
http://acharya.org

அபூர்வார்த்த ரத்ன நிதி

(313. ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

160 பொங்கோதம் சூழ்ந்த :—

எம்பெருமான் உபயவிபூதிநாயகனென்பதை சாஸ்த்ரமுகத்தாலறிகின்றோம். நம்மாழ்வார், ஆண்டாள் ஆகிய இருவரும் இதைப் பேசியுள்ளனர். நம்மாழ்வார் திருவிருத்தத்தில் (33) "அருளார் திருச்சக்கரத்தால் அகல்விசும்பும் நிலனும் இருளார் வினைகெடச் செங்கோல் நடாவுதிர்" என்று எம்பெருமானுடைய உபயவிபூதி நாதத்வத்தையருளிச் செய்தார் ஆண்டாள் தனது திருமொழியில் (11-3) "பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதுஞ் சோராமே ஆள்கின்ற வெம்பெருமான் செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார்" என்று அருளியது காண்க. எம்பெருமான் நித்திய விபூதி, லீலா விபூதி ஆகிய இவ்விரண்டையும் தன்னடியாரிட்ட வழக்காக்குவன் என்பதை "பொன்னுலகாளீரோ புவனிமுழுதாளீரோ நன்னலப்புள்ளினங்காள்" என்ற திருவாய்மொழிப் பாசுரத்தால் இனிதறியலாம். "திவ்யப்ரபந்த மஹாநிதி"யில் இதன் விரிவு காண்க.

161 பொன்னிவர் மேனி :—

பெரிய திருமொழியில் (9-2) பதிகத்தின் தொடக்கமிது. திருநாகை ஸௌந்தர்யராஜப் பெருமாள் விஷயமான பதிகமாமிது. திருமங்கையாழ்வார் மற்றைத் திருப்பதிகளுக்குப் பதிகமிடும்போது "திருக்கண்ணங்குடியுள் நின்றானே" "இடவெந்தை யெந்தைபிரானே" "பரமேச்சுர விண்ணகரமதுவே" "அரங்கமாநகரமர்ந்தானே" என்று இங்ஙனே திவ்யதேசத்தின் திருநாமத்தை அவ்வப்பதிகங்களின் ஒவ்வொரு பாசுரத்திலும் அமைத்தருளியிருக்கிறார்; ஆனால் ப்ரக்ருத பதிகத்தில் "அச்சோ வொருவரழகியவா" என்றே ஒவ்வொரு பாசுரமும் முடிகின்றது. ஆனால் இப்பதிகம் திருநாகைப் பெருமானுக் கிட்டருளியது என்பதை பக்தர்கள் உணர்வதற்காக நிகமனப் பாசுரத்தில் 'நாகையழகியாரை' என்றருளிச் செய்தனர். இதேபோன்று "வெருவாதாள் வாய் வெருவி" என்ற பதிகத்திலும் ஸ்ரீரங்க திவ்ய தேசத்தின் திருநாமத்தைப் பாசுரந்தோறும் அருளிச்செய்யாது நிகமனப் பாசுரத்தில் "திருவரங்கத்தம்மானைச் சிந்தை செய்த" என்பதனால் திருவரங்கனே பதிகத்திற்கு விஷயபூதனென்றுணர்த்தியருளினர் அது நிற்க; திருநாகைப்பதிகத்தில் "அச்சோ வொருவரழகியவா!" என்றே பாசுரந்தோறும் பணித்தது. அப்பெருமானுடைய திருநாமம் ஸௌந்தர்யராஜன் என்பதை நன்கு காட்டித்தரும். ...

162 போய்ப்பாடுடைய நின் தந்தையும் தாழ்த்தான் :—

பெரியாழ்வார் திருமொழியில் (2-3) பதிகமிது. கண்ணபிரான் விஷயமாக எத்தனையோ க்ரந்தங்கள் தோன்றியுள்ளன. ஸ்ரீ விஷ்ணுபுராணம், ஸ்ரீ பாகவதம் போன்றவை கண்ணன் கதையைக் கூறுகின்றனவே யொழிய ஆழ்வார்களுடைய அநுபவம் அவற்றுள் காணக்கிடையா. பெரியாழ்வார் மங்களாசாஸனத்தையே தமக்கு நிரூபகமாக உடையவர். கண்ணனுடைய சரிதையை அநுஸந்திக்கும்

http://acharya.org

போதும் (அதாவது) ஆய்ச்சியாகிய வன்மையின் பாலனை யேற்றபோதும் பெரியாழ்வார் தம்முடைய பண்பை விடாமலிருப்பது அநுபவரஸிகர்கட்கு இன்சுவை பயப்பதாம். 'போய்ப்பாடுடைய' என்னுமிப்பதிகம் யசோதைப்பிராட்டி தன் மகனை கண்ணனைக் காதுகுத்த அழைப்பதாக அமைந்துள்ளது. முதற் பாசுரத்திலேயே பெரியாழ்வார் தமது முத்திரையைப் பதிக்கின்றார். "போய்ப்பாடுடைய நின் தந்தையும் தாழ்த்தான் பொருதிறற் கஞ்சன் கடியன் காப்பாருமில்லை கடல் வண்ணா வுன்னைத் தனியே போயெங்கும் திரிதி" என்று வயிறுபிடிக்கிறார். கூர் வேல் கொடுந் தொழிலனான நாயகன் நந்தகோபனும் பசுமேய்ப்பினின்றும் மீண்டிலன். கம்ஸனோ கடியன். நின்மேல் கறுக்கொண்டவன். நீயோ தனியே எங்கும் திரிந்து விளையாடுகின்றாய். உன்னைக் காப்பாரார் உளர்?" என்று பெரியாழ்வார் அருளிச்செய்தவிது ஆழ்ந்து அநுபவிக்கத்தக்கது.

163 பௌவமெறிதுவரை :—

பெரியாழ்வார் திருமொழியில் (4.1-6) பாசுரத்தில் "பல்லாயிரம் பெருந் தேவிமாரொடு பௌவமெறிதுவரை" என்றருளிச்செய்கிறார். துவரை என்றது த்வாரகையை. த்வாரகை கடலில் மூழ்கிவிட்டதாகச் சிலர் கூறுவர். அது தவறான கருத்து. 'பௌவ மெறிதுவரை' என்பதற்குக் 'கடலலைகள் மோதும் படியான த்வாரகை" யென்பது கருத்து அவ்வாறே கடற்கரையிலுள்ள த்வாரகையை இன்றுப் ஸேவிக்கின்றோம். பலமுறையும் சென்றினிது ஸேவித்து மகிழ்ந்ததுண்டு. நம்மாழ்வார் திருக்கண்ணபுரத்தை மங்களாசாஸனம் செய்தருள்கையில் "வேலை மோதும் மதிள்சூழ் திருக்கண்ணபுரம்" என்கிறார். திருக்கண்ண புரத்திலுள்ள வெள்ளியெய்ந்த மதிள்மேல் கடலலைகள் மோதுகின்றன வென்றபடி. திருக்கண்ணபுரம் கடற்கரையில் இப்போது அமைந்திருக்கக் காண்கின்றிலோம். ஆழ்வார் காலத்தில் கடலும் கடல்வண்ணனான கண்ணபுரத்தெம்பெருமானுடைய கடிமலரடியிணையில் கிடந்திருந்தது போலும்!

164 மடியடக்கி நிற்பதனில் :—

பெரிய திருவந்தாதியில் முப்பதாம் பாசுரம் வருமாறு:—"இங்கில்லை பண்டு போல் வீற்றிருத்தல் என்னுடைய செங்கண்மால் சீர்க்கும் சிறிதுள்ளம் அங்கே மடியடக்கி நிற்பதனில் வல்வினையார் தாம் ஈண்டடியெடுப்பதன்றோ அழகு?" என்று எம்பெருமானுடைய ஸௌலப்ய குணத்தை அநுஸந்தித்த ஆழ்வார் அவ்வநுபவம் திருவுள்ளத்தில் தாங்கமுடியாதபடி விஞ்சவே அந்த ஆனந்தத்தினால் பாவங்களைக் குறித்துப் பேசுகின்றார்.

பாவங்களே! இதுவரையில் நீங்கள் என்னுடைய நெஞ்சை உங்களுக்கு வாஸஸ்தானமாக ஆக்கிரமித்துக் கொண்டு உங்களுடைய பெருமையெல்லாந் தோற்ற விசாலமாகக் கிடந்தீர்கள்; நான் பகவத் விஷயவாஸனை யறியாத காலத்தில் நீங்கள் என் நெஞ்சில் குடியிருந்தீர்களத்தனை; இனி அப்படியிருக்க முடியாது; ஏனென்றால். இப்போது என்னெஞ்சு பகவத்குணாநுபவம் பண்ணத் தொடங்கி விட்டது. "உயர்வறவுயர் நலமுடையவன்" என்றபடி அநந்த கல்யாண குணத்

http://acharya.org

மகனுன அப்பெருமானுடைய குணங்களுக்கே இங்கு இடம் அற்பமாயிருக்கும்போது உங்களுக்கு இங்கே இடம் கிடைக்கப்ரஸக்தி ஏது? —என்றிப்படி ஆழ்வார் பாப ராசிகளை சேதநஸமாதியாலே விளித்துச் சொல்லவாறே, அவை "ஆழ்வீர்! நெடு நாள் இங்கே பழகிக்கிடந்த எங்களை இன்று இப்படி அடித்துத் துரத்தி விடலாகாது; உமது நெஞ்சில் எங்களுக்கு முன்போல் விசாலமாக இடம் கிடைக்காவிட்டாலும் ஒரு மூலையில் பதுங்கி நிற்கும்படி மிக்க சூக்ஷ்மமான இடம் கிடைத்தாலும் எங்களுக் குப் போதும்; அரைத்துணிகளை இடுக்கி நெருக்கிப் பிடித்துக்கொண்டு ஒரு மூலை யிலே மழைக்கு ஒதுங்கி நிற்பாரைப்போலே நாங்கள் கஷ்டப்பட்டுக்கொண்டாகி லும் ஒருபக்கமாகக் கிடக்கிறோம்; எங்களை விலக்காமல் இடங்கொடுத்துக் காத்தரு ளவேணும்" என்று பணிந்து வேண்டிக்கொள்ள, பின்னடிகளால் அதற்கு மறு மொழி கூறுகிறார்—பெருமை தோற்ற நன்றாக வாழ்ந்தவர்கள் அப்படி வாழமுடி யாமல் கஷ்டப்படநேர்ந்தகாலத்து கண்மறைய ஓடிப்போய் விடுவதன்றோ அழகு என்கிறார்.

165 மலைக்கு மேன்மலை விளக்காமழகா :—

அழகர் கலம்பகத்தில் காணும் அழகொழுகும் தமிழ்ப்பாடலொன்று 'மலைக்கு மேல்' என்று தொடங்குவதாம். பாடல் வருமாறு:—"மலைக்குமேன்மலைவிளக்காம் அழகா வேத வான்குதலை நான்குதலை மகனுர் வாளா, தலைக்கு மேல்எழுதுகின்றார் அரியென்றெங்கள் தாலத்தின் மேலெழுதச் சமர்த்திலாரோ, அலைக்குமேல் உடு மலராமித்க்குங்காலம் ஆலமொன்று காயாம்பூவலர்ந்தாற் போற்பச், சிலைக்கு மேற் செங்கண்வளர் அனந்தானந்தா இருக்கிலிருக்கும் பொருளே யெம்பிரானே!" இப் பாடலின் சுவைமிக்க பொருள் கேண்மின். மாலிருஞ்சோலை மேய மணி விளக்காம் அழகனே! (உன்னிடம் மறைகளையோத உணர்ந்தவனுகிய) உன் மகனுகிய பிரமதேவனது செயலைச் சொல்லுகிறேன் கேள். அவனுக்கு ஏதோ எழுத வேண்டுமென்று தோன்றியது. உடனே எங்களது வலிய தலையில் பயனில்லாத வற்றை எழுதிவிட்டான். (ப்ரஹ்ம லிபி, தலையெழுத்து என்பது) மெல்லிய எங்கள் நாவில் 'அரி' என்ற இரண்டெழுத்தை எழுதலாமாயிருக்க, பேதைமை நிறைந்த செயலை அவன் செய்தனனே. ஒரு தலைக்கு நான்கு தலைகளாகப் பெற் றிருந்தும் உன் மகன் இவ்வாறு செய்தது அவனது குதலைச் சொற்களுக்கு இணங் கியேயுள்ளது" என்று. 'அரி' என்று எம்பெருமான் திருநாமத்தைக் கூறி உஜ்ஜீ வித்துப் போகாத எங்கள் விதி இருந்தவாறிது' எனபதனைச் சமத்காரமாகக் கூறி னுர் புலவரென்க.

166 மலையுங் கடலும் பொருந்தமிழ்ச் சோலைமலையரசே :—

இது அழகர் கலம்பகப் பாடலொன்றின் ஈற்றடியாம். பாடல் வருமாறு: "இலையும் பசும்புல்லும் செஞ்சுட்டரவும் இடைச்சி மடித்தலையும் சயனங்கொண்டீர் அடியேன் மனத்தாமரையில் அலையுஞ் செயலொழித்திங்கிருந்தாலென்ன வஞ்ச னமா மலையுங் கடலும் பொரும் தமிழ்ச்சோலை மலையரசே". சோலைமலைப் பெரு மானே! நீர் இராமாவதாரத்தில் வானரசேனையுடன் இலங்கை செல்லவேண்டி

http://acharya.org

வருணனை வழிவேண்டி கடற்கரையில் தர்ப்பசயனத்தின்மீது இருந்தீர். ஊழிதோறூழியும் ஆலினிலையதன்மேல் கண்வளர்ந்தருளினீர். இவ்வாறு புல்லிலும் இலையிலும் பள்ளிகொண்ட நீர் அடியேன் நெஞ்செனும் கஞ்சமலரிலும் வந்திருந்தால் என்ன குறையுண்டாம்? என்று வினவுமிது இன்சுவையுடைத்து.

167 மாவையிரந்திருவேங்கடத்தோங்கு மரகதமே :—

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பணித்த திருவேங்கடத்தந்தாதியிலுள்ள பாசுரம் (92) இது. பாசுரம் வருமாறு. "பாவையிரங்குமசோதைக்கு முத்துப் பதுமச்செல்விக் கேவையிரண்டன்ன கண்மணி நீலமிருசரணப் பூவையிரந்தவர்க்கின் பவளம் புல்லசுரர்க்கென்று மாவையிரந் திருவேங்கடத்தோங்கு மரகதமே". திருவேங்கடமலையில் மரகதமொன்று உள்ளது. அம் மரகதமே முத்தாகவும், நீலமணியாகவும், பவளமாகவும், வைரமாகவும் திகழும் அதிசயத்தை என்னென்பது! நிறத்தாலும் ப்ரகாசத்தாலும் திருவேங்கடவன் மரகதத்தை ஒக்கின்றான். இவனே யசோதைப் பிராட்டியின் நன்மைந்தனாகத் தோன்றியபோது முத்தென அவளால் போற்றப்பட்டனன். திருமாமகளுக்குக் கண்மணி நீலமாவான். (பிராட்டிக்குக் கண்ணின் கருவிழியனையான் என்க) திருவடியிணைகளைப் பிரார்த்திக்கும் அடியவர்க்கு இன்பவள்மாகிறான். ('இன் பவளம்') என்று பிரித்து 'பவளம' என்ற பொருளும் 'இன்ப வளம்' என்று பிரித்து பேரின்பப்பெருவளம் என்ற பொருளும் காண்க. அசுரர்க்கு வைரமாகிறான். (வைரம்—(1) இரத்தின விசேஷம் (2) பெரும் பகை என்ற பொருள்கள் காண்க) எனவே மரகதமொன்றே ஒவ்வொருவர்க்கு ஒவ்வொருவகை இரத்தினமாக விளங்குவதாகக் கூறியவிது சுவைமிக்கது.

168 மின்னனைய நுண்ணிடையார் :—

பெரியாழ்வார் திருமொழியில் (2-2-6)ஆம் பாசுரத்தொடக்கம் இது. ஸ்ரீவில்லிபுத்தூரை மங்களாசாஸனம் செய்தவர்கள் இருவரே. பெரியாழ்வார் ஸ்ரீவில்லிபுத்தூரைப்பற்றி யருளிச்செய்யும்போது ஆண்டாளுடைய பெருமையை அதில் அமைத்தருளினர். ஆண்டாளுடைய பாசுரத்திலும் (ஸ்ரீவில்லிபுத்தூரைப் பற்றிய பாசுரத்தில்) பெரியாழ்வாருடைய பெருமை கூறப்பட்டுள்ளது. ப்ரக்ருதம் பெரியாழ்வார் பாசுரம் கேண்மின். "மின்னனையநுண்ணிடையார் விரிகுழல்மேல் நுழைந்த வண்டு இன்னிசைக்கும் வில்லிபுத்தூர்" என்பது பெரியாழ்வார் பாசுரப் பகுதி. வடபெருங்கோயிலுடையான் ஆண்டாளுடைய திருக்குழலிலே படிந்த பூமாலைகளை மிக விருப்பினன் என்பது விசதம். அதனையே இங்கு அருளிச்செய்தனர் பட்டர்பிரான். மின்னனைய நுண்ணிடையார் ஆண்டாள். அவருடைய விரிகுழல்மேல் நுழைந்த வண்டு வடபத்ரசாயி. "தூவியம் புள்ளுடைத்தெய்வ வண்டு" என்று எம்பெருமான் வண்டாகக் கூறப்பட்டது காண்க. எனவே ஆண்டாளுடைய பெருமை இதில் காணப்படுவது ரஸிகர்கட்கு அருவிருந்தென்க. ...

169 மீன்நோக்கும் நீள்வயல்சூழ் :—

பெருமாள் திருமொழியில் ஐந்தாம் பதிகத்தில் மூன்றாம் பாசுரத்தின் தொடக்கம் "மீன் நோக்கும் நீள் வயல்சூழ் வித்துவக்கோட்டம்மா" என்பது. திரு

http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

வித்துவக்கோட்டின் நீர்வளத்தை வருணிக்கின்றார் குலசேகராழ்வார். இவ்விடத்து வியாக்கியான ஸ்ரீஸூக்தி வருமாறு—"கடலில் மத்ஸ்யம் கடல் வற்றினால் நமக்குப் புகலிடமென்று நினைத்திருக்கும் தேசமாய்த்து" என்று இதனால் அவ்விடத்து நீர்வளம் ஒப்புயர்வற்றதென்றதாம். இந்த விசேஷணமிட்டதின் குறிப்பால் பரமபதத்திலுள்ளாரும் அதனைவிட்டு வந்துசேரக் கருதும் திவ்யதேசமென்ற சிறப்பு விளங்குமென்று கொள்வது ஸம்ப்ரதாயம்.

170 முன்னவராம் நங்குரவர் மொழிகளுள்ளப்பெற்றோம் :—

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த ஆர்த்தி ப்ரபந்தத்திலுள்ள பாசுரமொன்று கேண்மின்.

"தென்னரங்கர் சீரருளுக்கிலக்காகப் பெற்றோம்
திருவரங்கந்திருப்பதியே இருப்பாகப் பெற்றோம்
மன்னியசீர் மாறன் கலையுணவாகப் பெற்றோம்
மதுரகவி சொற்படியே நிலையாகப் பெற்றோம்
முன்னவராம் நங்குரவர் மொழிகளுள்ளப்பெற்றோம்
முழுதுநமக்கவை பொழுதுபோக்காகப் பெற்றோம்
பின்னையொன்று தனில்நெஞ்சு போராமல் பெற்றோம்
பிறர்மினுக்கப் பொறாமையிலாப் பெருமையும் பெற்றோமே"

மணவாளமாமுனிகள் தமக்குண்டான பெருமையைத் தாமே அருளிச்செய்திருளிதில். பூர்வாசாரியர்களின் ஸ்ரீஸூக்திகளையே தாம் தஞ்சமாகக்கொண்டவர் என்பதனை 'முன்னவராம் நங்குரவர் மொழிகளுள்ளப் பெற்றோம்" என்பதனால் காட்டியருளினர். முன்னோர் மொழிந்தமுறை தப்பாமல் கேட்டுப் பின்னோர்ந்து தாம் அதனைப் பேசிய பெருமை மணவாளமாமுனிகட்கு அஸாதாரணமெனக.

171 மும்மதத் திருசெவி யொருதனி வேழத்தரந்தையை

திருவெழுகூற்றிருக்கையில் "நாற்றிசை நடுங்க அஞ்சிறைப் பறவையேறி நால்வாய் மும்மதத்திருசெவி யொருதனி வேழத்தரந்தையை ஒரு நாளிருநீர் மடுவுள் தீர்த்தனை" என்பதனால் ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுடைய கதை அநுஸந்திக்கப்படுகிறது. நால்வாய்—நாலுதல்-தொங்குதல், யானைக்கு வாய் தொங்குதல் இயல்பு. மும்மதம் — இரண்டு கன்னங்களிலும் குறியிலும் ஆகமூவிடங்களில் யானைக்கு மதப்புனல் சோரும். இருசெவி — இரு என்று பெருமையைச் சொல்லிற்றாய், பெரிய காதுகளையுடையது என்றுமாம். யானைக்கு வாய் தொங்குதலும் மத நீர் பெருகுதலும் காதுகள் பெரிதாயிருத்தலும் அதிசயமான விஷயமன்றே; இதைச்சொல்லி வருணிப்பதற்கு ப்ரயோஜனம் என்னெனில்;— ஒரு குழந்தை கிணற்றில் விழுந்தபோது, அதனையெடுத்துக் கரையிலேபோட்டவர்கள் "அந்தோ! இதொருகாலழகும் இதொரு கையழகும் இதொரு தலையழகும் இதொரு முகவழகும் என்னே!" என்று சொல்லிச் சொல்லி மாய்ந்து போவர்களன்றோ; அப்படியே எம்பெருமானும் யானையின் காலை முதலைவாயினின்றும்

Released by Maran's Dog ,Toronto, Canada
http://acharya.org

விடுவித்த பின் அதனுடைய வாயும் செவியும் முதலிய அவயவங்களின் அழகிலே ஆழ்ந்து கரைந்தமைதோற்ற அந்த பக்வத் ஸ்யாதியால் ஆழ்வார் ஆனையை வருணிக்கின்றாரென்க. இவ்விடத்தில் வியாக்கியான ஸ்ரீஸூக்தியின் போக்யதை அனுபவிக்கத்தக்கது:—"நால்வாய் மும்மதத் திருசெவி... என்றாற் போலே சொல்லுவதுக்குக் கருத்தென்னென்னில்; ப்ரஜை கிணற்றிலே விழுந்தால் 'காதுங் கண்டுவாளியும் காலும் தலையும் வடிவும் இருந்தபடி காண்!' என்பாரைப் போலே இடர்ப்பட்ட இதினுடைய அவயவங்கள் அவனுக்கு ஆகர்ஷகமாம்படியாலே சொல்லுகிறது" என்ற ஸ்ரீஸூக்தி காண்க.

172 மூத்தவற்கரசுவேண்டி.

பெரிய திருமொழியில் (4—6—7) பாசுரம் "மூத்தவற்கரசுவேண்டி முன்பு தூதெழுந்தருளி" என்று தொடங்குவதாம். (மூத்தோனாகிய)யுதிஷ்டிரனுக்கு அரசுரிமையைப் பெறுவித்தற்பொருட்டுக் கண்ணபிரான் துரியோதனனிடம் தூது சென்ற வரலாறு இதில் அருளிச் செய்யப்பட்டது. ஸ்ரீ குலசேகராழ்வார் இராமபிரானை "இளையவர்கட்கருளுடையாய் இராகவனே தாலேலோ" என்று இளையவர்கட்கருள்பவனாக (இளையவர்கள்— துர்ப்பலராய் இளைத்தவர்கள், தம்பிகள் என இருவகைப் பொருள் காண்க) அருளிச் செய்கிறார். எனவே கண்ணன் மூத்தோர்க்கருளுடையவன், இராமன் இளையவர்கட்கருளுடையான் என்று இது வொரு ரஸோக்தியாகக் கொள்க.

173 மூவுலகளந்த சேவடியோயே

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாசிரியத்தின் முதல் பாசுரம் "மூவுலகளந்த சேவடியோயே" என்று முடிவதாம். நம்மாழ்வாருடைய திவ்ய ப்ரபந்தங்களுள் திருவிருத்தம் ருக்வேத ஸாரமென்றும் திருவாய்மொழி ஸாமவேத ஸாரமென்றும் திருவாசிரியம் யஜுர்வேத ஸாரமென்றும் பெரிய திருவந்தாதி அதர்வண வேதஸாரமென்றும் கூறுவர். பெரியோர். யஜுர்வேதம் ஸப்த காண்டங்களையுடையது. திருவாசிரியமும் ஏழு பாசுரங்களாலமைந்தது என்னுமிஃதொன்றினைக்கொண்டே திருவாசிரியத்தை யஜுர்வேதஸாரமென்று கொண்டார்களல்லர் பூர்வாசாரியர்கள். "மூவுலகளந்த சேவடியோயே" என்ற இவ்வடிதன்னிலே மறையின் நறுமணம் கமழ்தலை யறிக. "உருக்ரமஸ்ய ஸஹிபந்துரித்தா" என்ற வேத வாக்யத்தில் உலகளந்த வபதாநம் கூறப்பட்டது. அதனையே "மூவுலகளந்த சேவடியோயே" என்பதனால் ஆழ்வார் அருளிச் செய்தனரென்க. விரிவு பிறிதோரிடத்தில்.

174 மெய்ம்மலர்தூய்க் கைதொழுதால்

மூன்றாம் திருவந்தாதியில் (76)ஆம பாசுரம் வருமாறு:— 'பொருப்பிடையே நின்றும் புனல் குளித்தும் ஐந்து நெருப்பிடையே நிற்கவும் நீர் வேண்டா—விருப்புடைய வெஃகாவே சேர்ந்தானை மெய்ம்மலர் தூய்க் கைதொழுதால் அஃகாவே தீவினைகளாய்ந்து". பாவங்கள் தொலைந்து நற்கதி பெறவேணுமென்று விரும்பினால் அதன் பொருட்டு உடலை வருத்தி அருந்தவம் ஏதும் புரிந்திட வேண்டாம். மலர்கொண்டு மாயனைப் பணிந்தால் அது தன்னாலே கொடுவினைகள் மாளுமென்க

http://acharya.org

மலரும் நறுமணமுள்ளதொன்றாகத் தேடவேண்டா. "புரிவதும் புகைபூவே" (திருவாய்மொழி 1-6-1) என்றதனால் கண்டகாலியும் (முள்ளுடைய பூ) இடவமையும் என்றன்றோ பட்டர் அருளிச்செய்தது! ஆர்வத்தோடு இட்டால் எந்த மலரானாலும் எம்பெருமான் உகப்பன் என்க.

175 மேலைத்தாம் செய்யும் வினை

பெரிய திருவந்தாதியில் 44-ஆம் பாசுரத்தின் ஈற்றடியிது. பாசுரம் வருமாறு: "வகைசேர்ந்த நன்னெஞ்சும் நாவுடைய வாயும் மிகவாய்ந்து வீழா வெனிலும்— மிகவாய்ந்து மாலைத்தாம் வாழ்த்தா திருப்பரிதுவன்றே' மேலைத்தாம் செய்யும் வினை". இப்பாட்டுக்குப் பிள்ளை திருநறையூரரையர் ஒருபடியாகவும் பட்டர் ஒருபடியாகவும் நிர்வஹிப்பராம். அரையர் நிர்வஹித்தபடி எங்ஙனே யென்னில்;

எம்பெருமானுடைய ஏதேனுமொரு குணத்திலும் ஏதேனுமொரு சரித்திரத்திலும் பொருந்தி நின்ற நல்ல மனமும், அந்த ஒரு குணசேஷ்டிதத்தையே பேசிப் புகழ்ந்துகொண்டிருக்கிற நாவோடு கூடின வாக்கும் அப்பெருமானுடைய எல்லாக் குணங்களிலும் எல்லாச் சரித்திரங்களிலும் பொருந்தி மேல் விழுந்து அநுபவிக்கமாட்டா திருந்தவேயாகிலும், எப்படியாவது கஷ்டப்பட்டு ஸகல குணங்களிலும் ஸகல சரித்திரங்களிலும், நெஞ்சு பொருந்தும்படி செய்துகொண்டு ஸர்வேச்வரனை அநுபவித்து மங்களாசாஸநம் பண்ணவேண்டியிருக்க, அங்ஙனே பண்ணாதிருக்கிறார்கள் ஸம்ஸாரிகள்; இஃது ஏன்? என்றால். முற்காலத்தில் அவர்கள் செய்த பாவமே இதற்குக் காரணம்—என்பதாக (இஃது அரையர் நிர்வாஹம்). பட்டர் நிர்வாஹமெங்ஙனே யென்னில்;—ஆத்மாவினுடைய ஞானம் வெளியில் ப்ரஸரிப்பதற்கு வழியாக அமைந்திருக்கின்ற நெஞ்சும், எம்பெருமானைப் பேசுகைக்கு யோக்யமான நாவோடு கூடிய வாயும் ரஜோ குணமும் தமோ குணமும் மிக்கு ஸ்வயமாகவே பகவத் விஷயத்திற் படிந்தனவில்லையேயாகிலும். 'நம்மை ஈச்வரன் படைத்தது ஏதுக்கு? நமக்குக் கைகால் முதலிய கரணகளேபரங்களைக் கொடுத்தது ஏதுக்கு?' என்று ஆராய்ச்சிசெய்து பகவத் விஷயத்திலே பல்லாண்டுபாட இழிய வேண்டியது ப்ராப்தமாயிருந்தும் பாழும் ஸம்ஸாரிகள் பகவத் விஷயத்தில் அடியோடு இழியாதிருக்கிறார்களே; இதுவரையில் மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து ஸம்ஸாரிகளாயொழிந்தது போராதா? இனிமேலாவது நல்வழிபோகத்தேடலாகாதா? மேலுள்ள காலமும் நித்ய ஸம்ஸாரிகளாயிருப்பதற்கேயன்றோ இப்படி பாபிகளாய்த் திரிகிறார்கள்!—என்பதாம்.

176 மேலால் பரந்த வெயில் காப்பான்

நாச்சியார் திருமொழியில் (14-3) பாசுரத்தின் பின்னடிகள் "மேலால் பரந்த வெயில் காப்பான் வினதை சிறுவன் சிறகென்னும் மேலாப்பின் கீழ் வருவானை விருந்தாவனத்தே கண்டோமே" என்பது. கண்ணபிரான் பசுநிரை மேய்ப்புக்குக் காடுகளூடு போகும்போது பெரியதிருவடி அப்பிரான்மீது வெயில்படாதவாறு தன் சிறகுகளால் மறைப்பதனை இதனில் அருளிச் செய்தாள் ஆண்டாள். இதனால் கருடன் எம்பெருமானுக்கு விதானமாகவும் (மேற்கட்டி) இருப்பது பெறப்படும். ஆளவந்தார் பெரிய திருவடியைப்பற்றி அருளிச்செய்துள்ள (ஸ்தோத்ர ரத்னம்)

http://acharya.org

"தாஸஸ் ஸகா வாஹநம் ஆஸநம் த்வஜோ யஸ்தே விதாநம், வ்யஜநம் த்ரயீமய: உபஸ்த்திதம் தேந புரோ கருத்மதா" என்னும் ச்லோகத்தில "விதாநம்" என்று அருளிச் செய்தது ஆண்டாளின் இப்பாசுரத்தை உட்கொண்டே என்க.

177 மையார் கருங்கண்ணி :-

திருவாய்மொழியில் (9—4—1) பாசுரம் "மையார் கருங்கண்ணி" என்று தொடங்குவது. பாசுரம் வருமாறு. "மையார் கருங்கண்ணி கமல மலர்மேல் செய்யாள் திருமார்வினில்சேர் திருமாலே வெய்யார் சுடராழி சுரிசங்கமேந்தும் கையா உன்னைக் காணக் கருதுமென் கண்ணே." பெரிய பிராட்டியாரோடும் திவ்யாயுதங்களோடுஞ் சேர்ந்த சேர்த்தியைக் காண்பதற்குத் தமது கண்கள் விடாய்த்திருக்கிற படியைப் பேசுகிறாரிதில் ஆழ்வார். பிராட்டியின் புருஷகாரமானலொழிய ஈச்வரன் நமக்குப் பேறளிக்கமாட்டான். பிராட்டி எம்பெருமானைத் தன் அழகால் திருத்துவளாதலால் நம்வாழ்ச்சிக்குப் பிராட்டியின் திருக்கண்களே மூலகாரணமென்று அக்கண்ணழகைப் பேசுகின்றாராழ்வார் (மையார் கருங்கண்ணி) என்று. ஸ்ரீராமாயணத்தில் 'அஸிதேக்ஷணா' என்று பலகாலுஞ் சொல்லுகிறபடியே பிராட்டி இயற்கையாகவே கருங்கண்ணி. மையிட்டுக் கருமை ஸம்பாதிக்கவேண்டியதில்லை. ஆயினும் மங்களார்த்தமாகவே மையிடுகிறபடி. இப்பாசுரத்தில், முன்னடியிற் பெரிய பிராட்டியாருடைய சேர்த்தியைச் சொன்னவுடனே திருவாழி திருச்சங்குகளின் சேர்த்தியை மூன்றாமடியினுற் சொல்லுகையாலே இதிலிருந்து கூண்ட ஒரு ரஸ விசேஷத்தை நம்பிள்ளையருளிச் செய்கிறார் காண்மின். "இவள் கையில் லீலாரவிந்தம் அவனுக்கு போக்யமாயிருக்குமாபோலேயாயிற்று அவன் கையில் திவ்யாயுதங்கள் இவளுக்கு இனிதாயிருக்கும்படி" எ[ன்று] இத்தால் பிராட்டி பூவேந்தியிருக்குமாபோலே எம்பெருமான் ஆயுத விசே[ஷங்]களை ஏந்தியிருக்கிறபடி என்றதாயிற்று. "ஏந்துங்கையா" என்கையாலே வெறுந்திருக்கைகளையும் வெறுந் திவ்யாயுதங்களையுமன்றிக்கே இரண்டுஞ் சேர்ந்த சேர்த்தியையே தாம் காண வாசைப்பட்டிருப்பது தெரிவிக்கப்பட்டதாயிற்று.

178 மொய்ம்மாப்பூப் பொழிற்பொய்கை

திருவாய்மொழியில் (3-5) பதிகம் "மொய்ம்மாப்பூப்பொழிற் பொய்கை" என்று தொடங்குவது. எம்பெருமானுக்கு அன்பாலாட் செய்பவரை ஆதரித்தும் அன்பிலா மூடரை நிந்தித்தும் பாசுரங்கள் அருளிச் செய்கிறாராழ்வார் இப்பதிகத்தில். இப்பதிகத்தில் முதற்பாசுரத்தில் ஸ்ரீகஜேந்த்ராழ்வானை ரக்ஷித்தருளின எம்பெருமானுடைய ஆச்ரித வாத்ஸல்யத்தை யநுஸந்தித்தும் விகாரமடையாதிருப்பாருடைய பிறப்பு வீண் என்கிறார். நம்பிள்ளையீடு கேண்மின்; "பட்டர் இவ்விடத்தை அருளிச்செய்யா நிற்கச் செய்தே 'அவன் நூறாயிரஞ் செய்தாலும் விக்ருதராகாமைக்கு நாமே வேணும், நமக்கொரு ஆபத்து உண்டானல் இருந்தவிடத்திலேயிருக்கமாட்டாதே விக்ருதனாகைக்கும் அவனே வேணும்' என்றருளிச் செய்தார்" என்று. எம்பெருமானைப் போன்ற பரமதயாளு இல்லை; அவனது தலையில் ஈடுபடமாட்டாத நம்மைப்போன்ற வன்னெஞ்சருமில்லை என்றபடி. ...

[தொடரும்]

http://acharya.org

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்மேளனம்

(ஸ்ரீ காரப்பங்காடுஸ்வாமி டிரஸ்டின் ஆதரவில்)

ஸ்ரீ வைஷ்ணவத்தின் வளர்ச்சிக்கு ஆவன செய்வதற்கு ஸம்மேளனம் ஒன்று சென்னையில் (௨௨—3—75ல்) நடைபெறும். ப்ரபல பத்ரிகாதிபர்களும் உபந்யாஸகர்களும் அதில் கலந்துகொள்வார்கள்.

கருத்தரங்கு நடைபெறும்.

இடம்:— மயிலை மாதவப்பெருமாள் ஸன்னிதி.

நேரம்:— மாலை 3 மணி.

அன்பர்கள் கலந்துகொள்ளுமாறு ப்ரார்த்திக்கப்படுகிறார்கள்.

(ம: பா.)

BOOKS REVIEW

The Philosophy of Sri Ramanuja by Sri V. R. Srisaila Chakravarti (Coimbatore) Published by Sri V. S. R. Chakravarti, 21, Kasturi Ranga Iyengar Road, Madras-18. Price Rs 40-00.

The author was a great scholar in Sanskrit, Tamil and English and had a mastery over the various texts relating to Visistadwaita, having studied them under learned teachers. He is an author of several books on the subject and the one under review is perhaps the best among them. Herein he describes the most salient points of Visishtadwaita under the topics Cit, Acit and Iswara (or Soul, Matter and God).

Sri Ramanujacharya's Sri Bhashya does not discuss, in fullness, the nature of these three entities, because the Brahmasutrakara does not do it. Sri Yamunacharya's Siddhitraya, Sri Lokacharya's rahasyas (especially Tatwatraya) and some Sanskrit and Tamil works of Sri Vedantacharya have done full justice to the subject. The book under review gives in a cogent way, all that is contained in these and other works of our Purvacharyas, including Sri Bhashya. The presentation is lucid and attractive. The author walks strictly in the path trodden by them and does not deviate from it in the least, which is the greatest merit of this book, and makes it authentic. I heartily recommend its use to students and scholars of Visistadwaita philosophy, who prefer to study it in a foriegn language, rather than in their own mother tongue. Even a scholar who studies this book carefully, is sure to find out a rare gem here and there, which he has not, perhaps, come across in other books. As the publishers say, works on Visistadwaita are comparatively few. The present book is worthy of preservation in every Oriental Library. —*T. A. S.*

http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின் நூல் துறைகள்.

1. நாலாயிர திவ்யப்பிரபந்த வுரைகள்,
2. பூர்வாசார்ய தமிழ்ப்பிரபந்த ,,
3. ஸகல பூர்வாசார்ய ஸ்தோத்ர ,,
4. ஆழ்வாராசார்யப் பிரபாவ நூல்கள்,
5. இதிஹாஸ புராண சரித்திர ,,
6. ரஹஸ்யார்த்த விளக்க ,,
7. வேதாந்தப் பொருள் விளக்க ,,
8. ஸத்ஸம்ப்ரதாயார்த்த விளக்க ,,
9. வேதவிசாரலக்ஷண நூல்கள்.
10. லோகாபிராம உபந்யாஸ நூல்கள்
11. பராக்ஷேப்ரதிக்ஷேப நூல்கள்,
12. உபந்யாஸக ஸௌபாக்ய வெளியீடு
13. வடமொழி நூல் திரள்கள்,
14. ஹிந்தி பாஷையில் நூல்கள்
15. தெலுங்கு பாஷையில் ,,
16. பூர்வாசார்ய க்ரந்த வெளியீடுகள்.

விரிவான கியாடலாகுகள் தருவித்து விலரங்கரண்க.

சந்தாப்பணம் M. O. செய்பவர்கள்

Editor, GRANTHAMALA, Kancheepuram-631503.

என்ற விலாசத்திற்கு அனுப்புக.

n–delivered please return to :

P. B. ANNANGARACHARYA,

KANCHIPURAM. Pin Code631503

Released by Maran's Dog ,Toronto, Canada

To

Sriman / Srimathi

140. NARAYANA IYENGAR,
Perumal Koil,
KOTTAI,
KRODE.

Released by Maran's Dog ,Toronto, Canada

Edited and Published by P. B. Annangaracharya Swami
for Madras Sathgrantha Prakasana Sabha.

Printed by T. A. P. Srinivasavaradan at Sri Venkateswara Press,
Sannidhi Street, Kancheepuram-631503.

http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

பல பெரியார்களின் பெருமை (முன்னிதழ்த் தொடர்ச்சி)

(வைகுண்டவாஸிகளான ஸஹ்ருதய ஸுஹ்ருந்மணிகளைப்பற்றி எழுதிவருகிறேன்.)

ஸ்ரீமதுபயவே. S. கோபாலஸாமி ஐயங்கார் ஸ்வாமி

சென்னை மயிலாப்பூரில் ப்ரஸித்த அட்வகேட்டாக விளங்கினவர் S. கோபாலஸாமி ஐயங்கார். ஜகத்ப்ரஸித்தரான ஸ்ரீமதுபயவே. ஸர். S. வரதாசார்ய ஸ்வாமியின் ஸாக்ஷாத் மாதுலர் இவர். உபயவேதாந்தங்களையும் வரியடைவே கற்றவர். [இவர் ஸ்ரீமத் வரவரமுநி ஸம்ப்ரதாயஸ்தர்.] திருநாராயணபுரத்தில் ப்ரஸித்த வித்வந்மணியாக எழுந்தருளியிருந்த ஸ்ரீமதுபயவே. மண்டயம். ஆழ்வார் ஸ்வாமியைச் சில வருஷகாலம் தமது பங்களாவில் எழுந்தருளப்பண்ணிவைத்து அவர் ஸன்னிதியிலே உபயவேதாந்த ஸம்ப்ரதாய க்ரந்தங்களையெல்லாம் நன்கு அதிகரித்துப் பல வக்கீல்களுக்கு ப்ரவசனமும் செய்தவர். அடியேனுடைய மாதாமஹ ஜீயர்ஸ்வாமி ஸன்னிதிக்கு அடிக்கடி வந்து பஹுச்ருதாக்ரேஸரர் என்று ஸ்வாமியால் விருது சாத்தப்பெற்றவர். சென்னையில் அஹோபிலமடத்துப் பத்ரிகையாக முதன்முதலில் ஆரம்பம் செய்யப்பட்ட வேதாந்ததீபிகா பத்ரிகைக்கும் சில வருஷகாலம் ஸம்பாதகராகஇருந்தவர் இந்தஸ்வாமி. இவர்முன்னம் ப்ரஸ்தாவித்தவிரக்தி பாஷ்யகார ஸ்வாமியின் பெருமைகளைக் கேள்விப்பட்டு அவருடைய ப்ரவசந கோஷ்டியில் இரண்டொருநாள் அந்வயித்துப் போகவேணுமென்றே காஞ்சிக்குவந்து, அப்படியே அந்வயித்திருந்தகாலத்தில் ஸம்ப்ரதாய சந்த்ரிகாதிகளான சில க்ரந்தங்கள் அச்சிட்டு முடிந்திருப்பதையும் இன்னும் சில பெரியக்ரந்தங்கள் அச்சிட வேண்டி யிருப்பதையும் அடியேன் விஜ்ஞாபித்து இதை தேவரீரே நிறைவேற்றி வைக்கவேணுமென்று பலருடன்சேர்ந்து பிரார்த்தித்தேன். ஸமயம் நல்ல ஸமயமாயிருந்தபடியால் அந்த ஸ்வாமி ஒருவிதமான தடையும் போக்குபோக்கும் சொல்லாமல் "நாளையிலிருந்தே அச்சிட ஆரம்பித்து ப்ரூப் காபிகளை இவ்விடத்திற்கே அனுப்பிவரத் தடையில்லை" என்று அவலீலையாக ஸாதித்துவிட்டார். அக்காலத்தில், சென்னைமாநகரில் வாழ்ந்துவந்த கராலபாடி ஆழ்வாரய்யா என்கிற த்ரைவர்ணிகர் வித்வானும் விசேஷ தனிகராயுமிருந்தபடியால் ஸ்ரீ வைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபை யென்னும் பெயரால் ஒரு ஸபையை ஏற்படுத்தி அது சாச்வதமாக நடக்கும்படியான திட்டங்களும் செய்திருந்தார். அந்த ஸபையின் மூலமாக நம்முடைய ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் நூற்றுக்கணக்காக அச்சிடப்பட்டிருக்கின்றனவென்பது ஜகத்ப்ரஸித்தம். அடியேன் முத்ரணம் செய்யவேணுமென்று தெரிவித்த க்ரந்தங்களையெல்லாம் அந்த ஸபையின் மூலமாகவே அச்சிடுவித்துமுடித்தார். ரஹஸ்யத்ரய மீமாம்ஸா பாஷ்யம், பாலஸரஸ்வதியின் தாத்பர்ய தீபிகை, கடிநபத தீபிகையோடு கூடின சரமச்லோக டிப்பணி ... இத்யாதிகளான உத்க்ரந்தங்களெல்லாம் அடியேனுடைய முயற்சியினால் வெகு விரைவாகவே அச்சேற்றப்பட்டு முடிந்தன.

Released by Maran's Dog ,Toronto, Canada

ஸ்ரீமத். (திருவிண்ணகர்) நவநீதம். ஸ்ரீக்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி

திருக்குடந்தைக்கு ஸமீபத்திலுள்ள திருவிண்ணகரென்கிற ஒப்பிலியப்பன் ஸன்னிதியில் நவநீதம் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியென்று ப்ரஸித்தரான மஹான்

Released by Maran's Dog ,Toronto, Canada
http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

ஸ்ரீரஸ்து

உபந்யாஸகர்களுக்கு உபஹாரங்கள்

வைநதேய விருத்தாந்தமொன்று

மஹாபாரதத்தின் ஓர் இதிஹாஸம் கேண்மின்;— விச்வாமித்ரனிடத்தில் வித்யைகளையெல்லாம் அதிகரித்த காலவனென்று மந்தணன் முடிவில் "குருதக்ஷிணை கொடுத்தாலொழிய நமக்கு இந்த வித்யைகள் நிலைநில்லா" என்றெண்ணி "அடியேன் என்ன தக்ஷிணை ஸமர்ப்பிக்கவேணும்?" என்று கேட்டான்; அதற்கு அவர், நான் உன்னுடைய பக்தியினாலும் சுச்ரூஷையினாலும் ப்ரஸந்நனாயினேன்; எனக்கு நீ ஒன்றும் ஸமர்ப்பிக்கத்தேவையில்லை" என்றார். அப்படி அவர் பலகால் சொல்லியும் காலவன் கேளாமல் "ஏதாவதொரு தக்ஷிணை நியமித்தேயாகவேணும்" என்று நிர்ப்பந்திக்கவே, அவர் சீற்றங்கொண்டு "உடம்பெல்லாம் சந்திரமண்டலம் போலே வெளுத்து ஒரு காது பச்சையாயிருக்கப்பெற்ற எண்ணூறு குதிரைகள் கொண்டு தா" என்றார். காலவன் இதைக்கேட்டு வியாகுலனாய் என் செய்வதென்று சிந்தித்து, ஸர்வாபேக்ஷிதங்களையுமளிக்கவல்ல எம்பெருமானை உபாஸிக்க முயன்ற வளவிலே முன்பே யிவனுக்கு ஆப்தனாயிருந்த கருடன் வந்து முன்னின்றான்; அவனை இவன் ஸ்தோத்ரம் பண்ணி, தன் வியாகுலத்தைச்சொல்லி இதற்கென்ன செய்யலாமென்று கேட்க "உன்னை நான் சுமந்து கொண்டு இப் பூமண்டலமெங்கும் திரிகிறேன் இருவருமாய்த் தேடிப் பார்க்கலாம் வா" என்றான் கருடன். அப்படியே இருவருமாய்த் திரியும்போது மேல் ஸமுத்ரத்தில் ரிஷபமென்னும் மலையின் மீது இளைப்பாற நின்றவளவில் அங்கே வஸிப்பவளும் அறிவிற் சிறந்தவளுமான சாண்டில்யை என்கிற ஒரு வைஷ்ணவியைக் கண்டு சென்று வணங்கி அவளால் ஸத்காரமும் பெற்று இவர்கள் அங்கே படுக்கும் போது" இப்படி விலக்ஷணையாயிருக்கிற இவள் விலக்ஷணமான வொரு திவ்ய தேசத்திலே வஸிக்கலாகாதா?" என்று கருடன் நினைத்து "இவளை இங்குநின்றும் ஒரு திவ்யதேசத்திலே கொண்டுபோய் வைக்கக்கடவோம்" என்றெண்ணியிருக்கையில்— அந்த வைஷ்ணவி இருந்த இடத்தை இழிவாக நினைத்த இவ்வபசாரத்தாலே சிறகுகள் உதிர்ந்து ஒன்றும் செய்ய முடியாமற் போய்விட, இதைக் காலவன் கண்டு 'மாநஸமாக ஏதேனும் அபசாரப் பட்டதுண்டோ? என்று கேட்க, அவன் உண்மையைச் சொல்லி அவளிடத்திலும் பொறுமை வேண்ட, அவளது அநுக்ரஹத்தாலே அவ்வபச்சாரம் நீங்கி முன்பு போலே யானான். (இக்கதை மஹாபாரதத்தில் உத்யோக பர்வத்தில் 112-ஆம் அத்தியாயதிலுள்ளது.)

Released by Maran's Dog ,Toronto, Canada

—பிள்ளைப் பிள்ளையாழ்வானுக்கு ஆழ்வான் பணித்த வார்த்தை—

பிள்ளைப் பிள்ளையாழ்வானென்கின்ற ஒரு சிஷ்யருக்குக் கூரத்தாழ்வானருளிச் செய்ததொரு வார்த்தைக் கேண்மின்; பிள்ளைப்பிள்ளையாழ்வாரென்பவர் ஆபிஜாத்யம் முதலியவற்றால் மேம்பட்டவராகையாலேபாகவதவிஷயங்களில் விநயமில்லாமல் அபசாரப் பட்டுக் கொண் டயிருந்தார்; ஆழ்வான் இதைக்கண்டு "ஐயோ! இவர்க்கு இந்த பாகவதாபசாரம் இவருடைய ஜ்ஞாநாநுஷ்டானங்ளெல்லாவற்றையும் கீழ்ப்படுத்திதானே மேலாகி விநாசத்தை விளைத்திடுமே!, அதுக்கு வேலியிட்டு வைக்க

Released by Maran's Dog ,Toronto, Canada
http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

மில்லையிங்கு. இவ்விடத்திலேயே அடுத்த வாக்யத்தைக் காண்போம். *ஷ்ரு° வமெஷ்ராக்ஷவிய ஆதூ:* என்பதில் (வமெஷ்ரீ) என்றது இயற்கையான ஸ்வரம் மாறுமலிருப்பது காண்க.

மற்ருேரிடஞ் செல்வோம். *பொவொள க ஹஷெதி* என்ற விடத்தில் (அவொள)என்னும் பதம் தனக்குரிய ஸ்வரத்திலுள்ளதாவென்று பார்க்கவேணும். அவ்விடத்திலேயே அடுத்தபடியுள்ள * அவொள யாஉஷ்ஜெதி * என்ற வாக்யத்தில் இயற்கையான ஸ்வரத்திலுள்ள *அவொளாடிம் ஆரம்பவாக்யத்தில் ஸ்வரிதங் கொண்டு வேறுபட்டுள்ளது. மற்றுமொன்று கேண்மின். அந்த முதல் வாக்யத்தின் முடிவிலுள்ள (உஷெதி) என்கிற திஙவடிம் இருக்கவேண்டிய ஸ்வரரீதியில் இருக்கின்றது. அடுத்த வாக்யத்தில் [வமெஷாஂ ஷூதா நா ஷிதூதியில்] உஷெதி என்பது அதே ஸ்வரமாக ஓதப்பட்டு வருவது விபரீயந்தானே. இங்கு உக என்பதில் அநுதாத்தமும் (ஷதி) என்பதில் ஸ்வரிதமும் விபர்யயந்தானே. மேலே (அஷூஜெதி) என்ற விடத்திலும் வயஷாயஷயத்திலும் ஸ்வரம் மாறுமலிருப்பதும் நோக்கத்தக்கது யஷுவதஷ ஷூயொழஷொங்களில் க்ரியாபதத்தில் ஸ்வரம் மாறுபட்டுத் தீரவேணுமே.

Released by Maran's Dog ,Toronto, Canada

இன்னேரிடஞ் செல்வோம். *ஸொடிவொஜாஷஷெஷமெஷ। தது நஜாத்தெ வாவஷெவெ:* என்கிற (ஆரண்யக) வாக்யத்தில் ஷாஸஷிவெஸ மிருக்கும்படியைக் காண்மின். இந்த வாக்யம் ஸம்ஹிதையிலோ அஷ்டகங்களிலோ வந்தால் இத்தகையஸ்வரத்தில் ஒருகாலும்வராது. *ஷஷஷ வுதியம ஷஇஷி: என்றவிடத்தைக் கொண்மின். இந்த (ஜயழ) என்கிற பதத்திற்கும் (ஷஇஷி:) என்கிற பதத்திற்கும் காணப்படுகிற ஸ்வரம் இயற்கையானதா? ஜயழ என்பது ஆத்யுதாத்தமாயும் அநுதாத்தமாயுமிருக்கவேணும் ஷஇஷி: என்பது ஆத்யுதாத்தமாக இருக்கவேண்டும்; முறையே * உயஷெவ வா யா ஷூயஷ:* என்ற விடமும், *ஷஇஷி ஷஷஷொ:* என்ற விடமும் காண்க. *யஷவஂ வெஷ* என்ற விடமும் காண்க. ஷவழ என்பது நிஹதமாக எங்கேனுமுண்டோ?

Released by Maran's Dog ,Toronto, Canada

இப்படியாக நாம் எடுத்துக்காட்டத் தொடங்கினுல் அபரிமிதமாகக் காட்டலாகும். இது முக்கியமான விஷயமாதலால் இன்னமும் சிறிது காட்டுகிறேம். *அயா ஷெரஷவஷஷஷ* என்ற விடத்தில் (ஷெ) என்கிற அக்ஷரத்தில் காணும் ஸ்வரிதம் எங்கேனும் காண்பதுண்டா? உடனே ஷெஷ: வஷவஷிஷூஷா என்றவிடத்தில் காணும் ஸ்வரமும் எங்கேனும் காண்பதுண்டோ? (வஷஷிஷூஷொஷஜாஷிவடிங்களில் காணும் ஸ்வரங்களும் விலக்ஷணமல்லவா? முதல் ஷூத்தின் கடைசி அநுவாகத்தைச் சொல்லிப்பாருங்கள். ஒரு வாக்யத்திலாவது ஸம்ஹிதையில் நடையாடும் ஷூஸஷிவெஸ காண்பதுண்டோ? * தவஷியஷெஜாஷவதி தவஷீ வஷெஜாஷவதி * என்கிற விதில் காணும் ஸ்வரம் எவ்வளவு விலக்ஷணமானதென்பதை நாம் சொல்லவேணுமா? ....

ஸ்ரீ தேவநாதாசாரியர் (ஷஷ (ஷஷா) என்கிற இரண்டு பதங்களை எடுத்துக்கொண்டு ஏதோ ஷூஷஂஷிக்கிருர். இவ்விரண்டு பதங்களுக்கும் ஷூஷ நைபதூமும் அயஷெஷு முள்ளதென்பதை அறியாதாரில்லை. *அஷாவா। தெஷா ஷெஷதி* என்ற

Released by Maran's Dog ,Toronto, Canada

Released by Maran's Dog ,Toronto, Canada

ரிஜிஸ்டர் நெ. 2975 ஸ்ரீ ராமாநுஜன்

P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின் நூல் துறைகள்.

1. நாலாயிர திவ்யப்பிரபந்த வுரைகள்,
2. பூர்வாசார்ய தமிழ்ப்பிரபந்த ,,
3. ஸகல பூர்வாசார்ய ஸ்தோத்ர ,,
4. ஆழ்வாராசார்யப் ப்ரபாவ நூல்கள்,
5. இதிஹாஸ புராண சரித்திர ,,
6. ரஹஸ்யார்த்த விளக்க ,,
7. வேதாந்தப் பொருள் விளக்க ,,
8. ஸத்ஸம்ப்ரதாயார்த்த விளக்க ,,
9. வேதவிசாரலக்ஷண நூல்கள்.
10. லோகாபிராம உபன்யாஸ நூல்கள்
11. பரபக்ஷப்ரதிக்ஷேப நூல்கள்
12 உபந்யாஸக ஸௌபாக்ய வெளியீடு
13. வடமொழி நூல் திரள்கள்,
14. ஹிந்தீ பாஷையில் நூல்கள்
15. தெலுங்கு பாஷையில் ,,
16. பூர்வாசார்ய க்ரந்த வெளியீடுகள்

விரிவான கியாடலாகுகள் தருவித்து விவரங்காண்க.

சந்தாப்பணம் M. O. செய்பவர்கள்

Editor, GRANTHAMALA, Kancheepuram-631503

என்ற விலாசத்திற்கு அனுப்புக.

If un-delivered please return to :

P. B. ANNANGARACHARYA,

KANCHIPURAM Pin Code-631503

Released by Maran's Dog ,Toronto, Canada

To

Sriman / Srimathi

85 Sri K. P. Ramanuja Iyengar,
"Ramanuja Vilas",
3/2 Neeli Veerasami Chetty St.,
Triplicane, Madras-5.

Released by Maran's Dog ,Toronto, Canada

Edited and Published by P. B. Annangaracharya Swami for Madras Sathgrantha Prakasana Sabba.

Printed by T. A. P. Srinivasavaradan at Sri Venkateswara Press, Sannidhi Street, Kancheepuram-631503.

Released by Maran's Dog ,Toronto, Canada

http://acharya.org